குறள் நெறி

தமிழ் வாழ்க

கட்சிச்சார்பற்ற அரசியல் இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு

ஆசிரியர் : பேராசிரியர் சி. இலக்குவனார், எம்.ஏ., எம்.ஓ.எல்.

ஆண்டுக் கட்டணம் ரூ. 5. | திங்களிருமுறை வெளிவருவது

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 வைகாசித்திங்கள் 19ஆம் நாள் (1-6-1964) | இதழ் : 10

திருவள்ளுவரினும் சிறந்த சமதர்மவாதி யார் ?

திருவள்ளுவரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொண்டு எனக்கு இப்பெருமை யளித்ததற்காகச் சென்னை மாநில முதலமைச்சர் அவர்களுக்கும், மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இடப்பட்ட இப் பணியை என் வாழ்க்கையிலேயே என்றும்பெருமைப் படத்தக்க பணிகளுள் ஒன்ருகப் போற்றுகிறேன்.



இந்தியக்குடியரசின் துணைத் தலைவர் சாகீர் உசேன் அவர்கள் 23-3-'64ல் திருவள்ளுவர் திரு உருவப்படத்தைத் திறந்துவைத்து ஆற்றிய பேருரை

தமிழ்நாட்டின் மீது என்றுமே எனக்குத் தனி விருப்புண்டு, பண்பாடு, ஒழுங்கு, கட்டுப்பாடு, கடின உழைப்பு இவற்றைவிரும்பும் எவரையும் ஈர்த்திழுக்கும் திறம் பெற்றது இந்த மாநிலம். தமிழ்நாடு இந்தியாவின் முன்னணியாயுள்ள மாநிலங்களுள் ஒன்ருகத் திகழ்கிறது என்ருல் அதற்குக் காரணம் அதன் மக்களின் கூர்த்த மதியும் உழைப்பும், சட்டுப்பாடு மட்டுமன்று; அவர்களுடைய அன்ருட வாழ்க்கை முறையில் ஒளிரும் இந்தியப் பண்பாடும் காரணமாகும் இம் மாநில மக்களின் வாழ்க்கையில் ஓர் அமைதிப்பாங்கும், பொறுமைப் பண்பும், பணியில் முழு மனதுடன் ஈடுபடும் தன்மையும் காண்கிறேம் இவை இந்த மாநிலத்தின் மக்களை உயர்ந்த ஒரு வாழ்க்கை நிலைக்கும் தொழில் முறைக்கும் உயர்த்துகின்றன. இந்த மாநில மக்களின் இந்தக் குணநலன்கள் ஒப்பற்ற சிறப்புப் பண்புகளாக எனக்குப் படுகின்றன அழியாப் பெருநூலான திருக்குறளை மேலோட்டமாய்ப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்ற பின்னர்த்தான் தமிழ் மக்களின், சமுதாய வாழ்க்கையில் ஒளிரும் சிறப்புப் பண்புகளுக்குத் திருக்குறள்தான் அடிப்படை என்பதை நான் உணர்ந்தேன்.

சில தமிழ்ப் பேரிலக்கியங்களின் மொழி பெயர்ப்புக்களைப் படித்திருக்கிறேன். ஈடு இணையற்ற இலக்கியச் செல்வங்கள் நிறைந்த வரலாற்றைக் கொண்டது தமிழ்மொழி என்பதை அவற்றின்மூலம் தெரிந்துகொண்டேன். இன்றையப்பணியை ஒப்புக்கொண்ட பிறகு திருவள்ளுவரின் பேரிலக்கியத்தின் மொழி பெயர்ப்பைப் படித்துப் பார்த்தேன். தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளத் தவறியதால் திருக்குறளை மூலத்திலேயே படித்து இன்புற இயலவில்லையே என்று பெரிதும் வருந்தினேன்.

திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றி நாம் பெருமைப்படுவதற்கான காரணங்கள் பலவுண்டு. இந்தியப் பண்பாட்டின் தலை சிறந்த சுடர் விளக்காகத் திருவள்ளுவர் திகழ்கிருர். அவருடைய உயர்ந்த குறிக்கோள்கள், (தத்துவ) மெய்ஞ்ஞான நெறி, செறிந்த செயல்முறை

(அடுத்த பக்கம் பார்க்க)

உள்ளே

தலையங்கம்:
இந்தியைப்பற்றிச் சொல்லும் செயலும்
தொல்காப்பிய விளக்கம்
அலகபாத் நேருவும் அப்துல்லாவும்
சேக்சுபியர்
பிளவுபட்ட கூரை
பாடல் அரங்கம்
குற்றியலுகரமும் பாவேந்தரும்
கண்ணகியின் தவறு
இளந்தமிழ் ஆசிரியர்களுக்கு இன்னல்
— இன்னும் பிற —

தனி இதழ் விலை 25 காசு

முயற்சி திருவினையாக்கும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

உணர்வு, உலக முழுவதற்கும் பொருந்தும் நீதிநெறி, இவை இந்தியப் பண்பாட்டுடன் கலந்து இந்திய மக்களின் பொதுவானபண்பாடாகத் திகழ்கின்றன. திருவள்ளுவர் தமிழ் நாட்டின் தவப் புதல்வர் என்பதில் ஐயமில்லை. உயர் நெறியாலும், தூய வாழ்வினாலும் கடவுள் பணிக்கும், மக்கள் சேவைக்கும் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அழியாப் புகழ்பெற்ற மெய்ஞ்ஞானக் கவிகள் வாழையடி வாழையாக இந்திய மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ற மனித்து வாழ்க்கையின் குறிக்கோள்களை உருவாக்கியிருக்கின்றனர். இந்த மெய்ஞ்ஞானக் கவிகளுள் ஒருவராக வள்ளுவர் விளங்குகிறார். குறுகியநெறிகளிலேயே மனிதனின் ஆன்மாவைச் சிக்க வைக்கும் தீய ஆற்றல்களை அகற்றும் முயற்சியில் தங்களுடைய உடல் பொருள் ஆவி எல்லாம் துறந்து பல விதத் துன்பங்களுக்கு ஆட்பட்டுக் கடுமையாக உழைத்து வாழ்க்கை நடத்திய சிந்தனையாளர்களும், கவிஞர்களும், தத்துவ ஞானிகளும், வாழ்ந்திருக்கின்றனர்; இவர்களுக்கெல்லாம் ஊக்கமும் உணர்வும் ஊட்டுபவர்கள் வள்ளுவர் போன்ற மெய்ஞ்ஞானக் கவிஞர்கள். பின்னர்த் தோன்றிய இலக்கிய ஆசிரியர்கள், கவிஞர்கள் ஆகியோரும் இந்த மெய்ஞ்ஞானிகளின் அடிபோற்றியே தங்கள் நூல்களை எழுதினர். அவர்களுடைய சிந்தனையும், உயர் நெறியும் நம் நாட்டு மக்களின் முயற்சிகளுக்குப் புதிய குறிக்கோள்களையும் திருப்பத்தையும் எவ்வாறு ஏற்படுத்தின என்பது எளிதில் புலப்படும். இந்தியாவின் அரசியல் இலக்கிய வரலாற்றில் காணப்படும் சில புதிய திருப்பங்களுக்கான காரணம் மெய்ஞ்ஞானிகளின் நூல்களே ஆகும்.

வழிவழி வந்த நம் நாகரிகத்தின் ஓர் அங்கமாகத் திருவள்ளுவரின் அறிவுரைகள் அமைந்துவிட்டன. நம்முடைய வாழ்க்கைப் போக்கை நல்வழியில் திருப்பிச் சீராக்கும் அளவுக்கு வள்ளுவரின் வாய்மொழிகள் நம் மக்கள் உணர்வில் அவர்கள் அறியாமலேயே, ஆழப் பதிந்து நிற்கின்றன. இன்று நம்முடைய குறிக்கோள் சனநாயக சமதர்மம் என்று அறிவித்திருக்கிறோம். இதன் மூலம் எல்லாத் துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்கவும் நாட்டுச் செல்வத்தை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கவும் உறுதியாக முனைந்திருக்கிறோம். நாம் வறுமையையும், எழுத்தறிவின்மையையும், பிணியையும் ஒழித்துக்கட்ட விரும்புகிறோம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலேயே நம்முடைய ஆக்கநலத் திட்டமும் அடங்கியிருக்கிறது.

சமதர்மம் (Socialism) என்பது ஒரு தற்காலக் கருத்து என்றே நாம் எண்ணுகிறோம். ஆனால் திருவள்ளுவர் இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன்பே, ஆட்சியாளர்களின் கடமைகள், செல்வத்தை இயற்றுதலும், பொருள் வரும் மூலங்களைப் போற்றிப் பாதுகாத்தலும், நாட்டைக் காத்தலும், செல்வத்தை நேர்மையாக வகுத்தளித்தலுமாகும் என்று தம்முடைய மணிச்சுருக்கமான நடையில் கூறியுள்ளார். ‘சில மனிதர்கள் இரந்தே உயிர்வாழ வேண்டுமென்று விதித்திருப்பானாயின் இந்த உலகத்தைப் படைத்த அந்த இறைவனே பரந்து கெடுக,’’ என்று கூறிய இந்தத் தமிழ்நாட்டுப் பெருமுனிவரை விடச் சிறந்த ஒரு சமதர்மவாதியென்று எவரைச் சொல்வது!

இந்தியா விடுதலை அடைந்த நாளிலிருந்தே நாம் விளை நிலங்களிலும், தொழிலகங்களிலும் கடின உழைப்பு வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறோம். இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் கடினமான உழைப்புடன் இடைவிடாது பாடுபடவில்லையெனில் நாம் உருவாக்கி நிறைவேற்றவிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒருபோதும் வெற்றியளிக்க முடியாது. ‘உன்னுடைய நாட்டின் உயர்வுக்காக முழு மனதுடன் உழைப்பதற்கு உறுதிகொள். அப்போது நீ எதிர்பார்க்காத அளவிற்கு உன்னுடைய உழைப்பினால் நற்பயன் விளையும்’’. என்று அன்று திருவள்ளுவர் கூறியதுதான் இன்று நம்முடைய அறிவுரைகளில் மீண்டும் சொல்லப்படுகின்றது.

நம் நாட்டில் மிகவும் சாந்தமும், சகிப்பும் அமைதியும் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்று குறிப்பிட்டேன். ஒழுங்கான வளர்ச்சியுறும் வளமான ஒருநாட்டின் தேவைகளைப் பற்றிக்குறிப்பிடும்போது திருவள்ளுவ முனிவர் கூறுகின்றார்: “ஒரு நாடானது இனம் மதம் அல்லது சாதி இவற்றின் வேறுபாட்டினால் எழும் பலவகைப் பிரிவுகளும் சமுதாயத்திற்கு உட்பகையும், அமைதியைக் குலைக்கும்படிக் கொலைத் தொழில் புரிவோரும் இல்லாதிருக்க வேண்டும்’’ இந்த அறிவுரையை ஏற்று இந்த நாட்டின் பலவேறு பகுதிகளில் வாழும் மக்கள் எல்லோரும் நட்புணர்ச்சியும், தோழமையும் கொண்டு அயலாரின் அச்சுறுத்தல்களுக்கு எதிராகத் தாய் நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவதற்காக உறுதிபூண வேண்டுமென்று ஒவ்வொரு இந்தியனும் விரும்புவது இயல்பன்றோ!

இந்தப் பெருமை மிக்க நூலினின்று மேற்கோள்களை எடுத்து முடிவின்றிக் கூறிக்கொண்டே இருக்கலாம். ஆனால் என்னுடைய குறைபாட்டை முன்னரே கூறிவிட்டேன். தமிழ்மொழியறிவு என்ற நற்பேறு எனக்கு இல்லை. நான் திருவள்ளுவரைக் காண்பது மொழிபெயர்ப்புகள் வாயிலாகத்தான். அன்றாட வாழ்வில் தீமையை எதிர்க்கவும், உன்னத வாழ்க்கை நிலையையும், உயர் சிந்தனைகளையும் பெறுவதற்கு உதவும் அறவுரைகளை அருளுபவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறைதான் இந்த உலகத்தில் தோன்றுகின்றார்கள். ஆனால் அவர்கள் என்றும் அழியா அமர வாழ்வு பெறுகின்றனர். திருவள்ளுவரும் இந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று நான் துணிந்து கூறுவேன். இந்த அழியாப் பெருநூலை யான் ஓரளவு படித்ததினின்றும் இந்தத் தமிழ்நாட்டுத் தவமுனிவர் உயர்ந்த நீதிநெறிகளை வகுத்தளித்த ஒரு மாபெரும் உயர்நெறியாளர் மட்டுமல்லர்; ஒரு மனிதன் தன்னுடைய குடும்பத்தினர்களுடனும், பிற மக்களுடனும், அரசாங்கத்துடனும் கலந்து பழகும்போது எவ்வெவ்வாறு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கான குறிப்புகளைக் கூறும் மிகச் சிறந்த நுண்ணிய செயல் முறை வல்லுநருமாவர் என்பதையும் நன்கு அறிந்துகொண்டேன். இதுமட்டுமன்று அவர் எல்லா நாடுகளுக்கும் எல்லாக்காலத்திற்கும் பொருந்துவனவாகிய விதிகளை வகுத்த அரசியலறிஞருமாவர். திருக்குறளின் இரண்டாவதுபாலில் அரசு, அமைச்சு இவைபற்றிய அறிவுரைகளைக் காண்கிறோம். இவை இக்காலத்திலும் நமக்கு வழிகாட்டுபவையாக இருக்கின்றன.

புகழேணியில் நின்றவர்களை எழுத்தோவியத்தில் வடிக்க முற்படுவனேயாகில். யான் முதன்முதலாகத் திருவள்ளுவரையே எடுத்துக்கொள்வேன். ஏனென்றால், அவர் திருக்குறளில் கூறியிருக்கிறார்: “இந்த உலகத்தில் எல்லாப் பொருள்களும் பொன்றிவிடுகின்றன. ஆனால் ஒப்பற்ற சாதனைகளைச் செய்துள்ள உயர்ந்த பெருமக்களின்புகழே மனித வரலாற்று ஏடுகளில் மங்காது என்றும்ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது’’ திருவள்ளுவரின் சாதனை ஒப்புயர்வற்றது. அதனால் அவர் பொன்றாத புகழோடு வாழ்ந்து வருகிறார். அவருடைய மாபெரும் ஆன்ம உணர்வு தமிழ்நாடு முழுவதும், ஏன், இந்தியா முழுவதிலுமே பரவி நிற்கிறது. உயர் நெறியும், செயல் திறமும் நிறைந்த அரசியல்ஞானியான இப்பெருந்தகை காட்டும் வழிதான் இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தமக்காக வகுத்தமைத்துக்கொண்ட பாதையில் செல்வதற்கு ஊக்கமும் உயர்ச்சியும் ஊட்டுகிறது எனலாம். இந்தியா இன்று சமுதாய, பொருளாதாரச் சமத்துவத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணம்இந்தத்தவமுனிவரின் நூலில் அடங்கியுள்ள அறிவொளியும் ஆற்றலுமேயாம். அந்தஅறிவுரைகள் மக்களின் உள்ளங்களில் ஆழ்ந்து படிந்துள்ளன. நீங்கள் எனக்களித்த இச்சிறந்த வாய்ப்புக்கு மீண்டும் உங்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது நான், தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும், மனித இனத்திற்கும் உரிய ஞானாசிரியரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்கிறேன்.

பேரிழப்பு — முத்தமிழ்க்காவலர்

கி. ஆ. பெ. விசுவநாதம்

கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய இழப்பு, தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழகத்திற்கும் நேர்ந்த ஒரு பேரிழப்பு. அதுவும் ஈடு செய்யமுடியாத இழப்பு ஆகும். அடுத்தடுத்து நல்லறிஞர்கள் பலரை தமிழகம் இழந்து வருவது பெரிதும் வருந்தத்தக்க ஒன்று.

பாரதிதாசன் அவர்கள் இந்த இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞன். அவர் இளமையிலேயே தமது ஆசிரியர் தொழிலையும் கைவிட்டு நானறிய நாற்பது ஆண்டுகளாக நற்றமிழுக்கு நற்றொண்டு புரிந்துவந்த நல்லறிஞன். அது மட்டுமல்ல., கவிதை உலகில் ஒரு புதிய திருப்பத்தையே உண்டாக்கிவிட்ட அரும்பெருங் கவிஞன்.

“பாரதிதாசன் கவிதைகள்” எனும் பெயரால் அவரது கவிதைகளிற் சிறவற்றைத் திரட்டி வெளியிடும் முதல் முயற்சியில் பங்குபெற்றவன் நான் என எண்ணும்பொழுது என் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. அதைவிட அதிக மகிழ்ச்சி உண்டாகிறது, அம் முதல் நூலுக்கு மதிப்புரை வழங்கியதை எண்ணும்பொழுது, அது “பாரதிதாசன் கவிதைகளில் ஒன்றைப்படித்தேன். அதை, கதைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒருமுறை, கருத்துக்காக ஒருமுறை, கற்பனைக்காக ஒரு முறை படித்தேன். அது ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு படித் தேன் எனச்சுவைத்தது” என்பதே. இது நாட்டில் நல்ல பயனை விளைவித்தது.

தமிழகப்புலவர் குழுவின் 2 வது கூட்டம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற் கூடியது. புலவர் பெருமக்கள் நாற்பத்தெண்மரும் தேரேறி ஊர்வலம் வர, அக்கூட்டத்தின் தலைவர் பாரதிதாசன் அவர்கள் யானைமீது அமர்ந்து தஞ்சை அரச வீதிகளில் உலா வந்த காட்சி இன்றும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்து வருகிறது. இனி அக்காட்சியை...?

பாரதிதாசனின் தோற்றமே தமிழனின் தோற்றம். அவரது வீரம் தமிழனின் வீரம். அவரது உடம்பில் ஓடிய இரத்தமும் தமிழ் இரத்தம். அவரது உணர்ச்சி தமிழ் உணர்ச்சி. சுருக்கமாகக்கூற வேண்டுமானல்; அவர் விடுகிற மூச்செல்லாம் தமிழ் மூச்சு எனக் கூறிவிடலாம். இவை நிறைந்த கவியே புதுவைக் கவி! அன்று புதுமைக் கவி! நேற்று முதுமைக்கவி! இன்று ...... !

தமிழகத்தின் மண்ணுக்கே ஒரு தனிவீரத்தை கற்பித்தவர் பாரதிதாசன் அவர்கள். “கோழியும் தன் குஞ்சுகளை கொத்தவரும் பருந்துகளை சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தோல்புவி” என்பது அவரது கவிதை.” உயிரினும்சிறந்த ‘தமிழ்’ என்பதுஅவரது ‘கொள்கை.’ உயிர் வெல்லமுமல்ல, தமிழும் அல்ல’ என்பது அவர் வாக்கு!

தமிழ் தோன்றிய காலந்தொட்டு எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் இத்தமிழ் மண்ணில் தோன்றியிருக்கிறார்கள். ஆனால், ‘தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே’ என்ற புரட்சிச் சொற்களைப் புரட்சிக்கவிஞரிடத்தான் கேட்டேன். அத்தகையபுலவனையும் இன்று இத்தமிழ்மண் தன்னுள் புதைத்துக்கொண்டது. இனியேனும் இம்மண்ணிலிருந்து இதுபோன்ற புலவர்கள் பலர் தோன்ற வேண்டும் என்பது எனது ஆசை.

பாரதிதாசனை ஒரு தமிழ்மன்னன் எனலாம். இத்தகையமன்னனை இழந்ததமிழகம் அவர் வாழ்ந்த போதும் சரியாக அறிந்து போற்றவில்லை. அவர் மறைந்தபோதும் சரியாக உணர்ந்து வருந்தவில்லை. இரண்டொரு இரங்கற் செய்திகளோடு அவரது வரலாற்றை முடித்துவிட்டது. இறந்தவர்களுக்கு அனுதாபத்தீர்மானம் போடுவதற்காகவே சில சங்கங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இறந்தவர்கள்மீது கவிபாடி வெளியிடுவதற்காகவே சில பத்திரிகைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இறந்தவர்களுக்கு இரங்கல் செய்திகளைச்சொல்வதற்கென்றே சிலர் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இம்மூன்றும் திருந்தி அவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களை வாழ்த்த—— போற்றத் தொடங்கிவிட்டால் தமிழகம்——?

கவிஞர், பாரதிதாசன் தமிழுக்குத்தொண்டன். தமிழர்க்கு அன்பர், புலவர்க்கு நண்பன்; புலவர்குழுவிற்குத் தலைவர்; கவிஞர்களுக்கு வழிகாட்டி; புரட்சிக்கவிஞருக்குத் தந்தை; சீர்திருத்தவாதிகளுக்குத் தலைவன்; தமிழ்ப்பகைவர் முன்னே தோள்கொட்டி தொடைதட்டி நிற்போரெல்லாம் அவரது உறவினர் அவரது பிரிவால் நாம் அனைவரும் கலங்குகிறோம். யார் யாருக்கு ஆறுதல் கூறுவது? மெல்ல நகர்ந்து செல்லும் காலம்தான் நம் அனைவர்க்கும் நல்லாறுதல் அளிக்கவேண்டும்.

அன்பு தமிழ்ச் சொற்பயிற்சி மன்றம்

அமைப்புக் கூட்டம்

பம்பாய்—தாராவி, ஆகாசவாடி எண். 95, ‘பேபி மல்லிகா உணவு விடுதியில்” திரு. சோ-க. செழியன் அவர்கள் தலைமையில், உணவுவிடுதியின் உரிமையாளர் திரு. என். எம். முத்தையா அவர்கள் முன்னிலையிலும் “அன்பு தமிழ் சொற்பயிற்சி மன்றம்” அமைக்கப்பட்டது.

திரு. செ. லாசர்-முதல்வர், திரு. கு. ந. இராசன்-துணை முதல்வர், திரு. நா. மா. கண்ணன் —பொதுச் செயலர், திரு. சு. வ. குருசாமி—துணைச் செயலர், திரு. நா. ப. அறிவழகன்—பொருளாளர், ஆகியவர்களை நிருவாகிகளாகவும், திரு. வெ. திருமலை நம்பியார், திரு. சு. நயினர், திரு. சு. நடராசன் ஆகியவர்கள் ‘படிப்பக’ பொறுப்பாளராகவும், திரு. செ. கனகராசு—தணிக்கையாளராகவும், திரு. மா. மா. சீனிவாசன் (ஓவியன்) விளம்பர எழுத்தாளராகவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

திரு. என். எம். முத்தையா, திரு. சொ. சு. மணியரசு, திரு. வெ. இராசு ஆகியவர்களின் அறிவுரைக்குப்பின், எல்லா தின, வார, மாத ஏடுகளைப் பெற்றுப் பயனடையவேண்டும் என முடிவுகொண்டு, நா. மா. கண்ணன் நன்றி நவில இனிதே நடந்தேறியது.

தனித் தமிழ்ப் படையின் தளபதி

— நெல்லை ந. சொக்கலிங்கம், பி. ஏ.

தமிழ் தொன்மையும் தோலாப்புகழும் மிக்கதொரு மொழியாம். இனிமையும் எளிமையும் கொண்ட செந்தமிழ் தனித்தியங்கும்தகைமையும் தகுதியும் பெற்ற பண்பட்ட மொழி என்று கால்டுவேலர் போன்ற மேனாட்டார் ஏற்றிப் போற்றும் கூற்றினை மேற்கொண்டு தமிழகத்தில் தனித்தமிழ் இயக்கம் தொடங்கப் பெற்றது. மாண்புமிகு தமிழ் மாற்றாரின் படை எடுப்பால், வேற்றுமொழிகளின் தாக்குதல்களால் புறக்கணிக்கப் பெற்றுப் போற்றுவாரற்றுக் கிடந்த காலத்தில்தான் எழுச்சிகொண்ட இயக்கம் துவண்டெழுந்தது. தனித்தியங்கும் வலிவும் பொலிவும் மிக்க தண்டமிழ் தரணியாளும் பொறுப்பிழந்து தாழ்ந்து கிடப்பதை நீக்கி, அரியணை ஏற்ற ஆட்சி செலுத்துமாறு அணிபெற வைத்தவர்கள் தனிததமிழ் இயக்கத்தினர். மறை மலை அடிகள் போன்ற தமிழ்ப் பெரும் புலர்வகளும் பாரதிதாசனார் போன்ற தமிழ்ப்படையின் தளபதிகளும் தறுகண்மையுடன் முன்னின்று செயல்பட்டனர். எனவேதான், இன்று தமிழ் வென்று நிற்கும்நிலைக்கு உயர்ந்துவிட்டது.

கால வெள்ளத்தில் கனிதமிழில் கலப்பு நிகழ்வது கண்டு மனம் பொறுத மறத் தமிழர் தளபதி "தமிழியக்கம்" கண்டார். அதில் அவர் கூறுவதாவது:—

"'பவன்' 'மண்டல்' முதலியன இனியேனும்
தமிழகத்தில் பயிலா வண்ணம்
அவண் சென்று முழங்கிடுவீர்! ஆங்கிலச் சொல்
இந்திமொழி வடசொல் யாவும்
இவண் தமிழிற் கலப்பதுண்டோ? பிராம்மணர்
கள் உண்ணும் இடம் இப்பேச்சில்
உவப்புண்டோ? தமிழ்மானம் ஒழிந்திடுதே
ஐயகோ உணர்வீர் நன்றே!" — என்று வீறுசால் உரை நிகழ்த்தி வேங்கையெனத் தமிழர் கூட்டத்தை எழுச்சிக்கொள்ள வைத்தார். தமிழில் தூய்மையுடன் எழுத முடியும்; எழுதினால் அது இனிமையுற இயங்கும். அதனைப் புலவர்கள்செய்ய முன்வர வேண்டுகின்றார் அவர்.

"தனித்தமிழில் தக்கபுதுக் காப்பியம்
நன்னூல் இயற்ற
நினைப்பாரேல் நம்புலவர் நிலவாவோ
ஆயிரநூல் தமிழகத்தே!"

என்று கூறும் சீரிய கருத்தினை சிந்தையிற்கொண்டு உழைக்கவேண்டும் நாம். மேலும் அவர் குயிலில் எழுதி வந்த 'வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?" எனும் தொடர் கட்டுரையை நூலாக்கித்தர ஆவன செய்யவேண்டும். வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் என வீரமுடன் முழங்கிய தளபதி இன்று நம்மை விட்டுப் பிரிந்ததை எண்ணுந்தோறும் நெஞ்சம் துணுக்குறுகின்றது. இருப்பினும் அவர் நமக்கு இட்டுச்சென்ற கட்டளைகளைத் தொடுத்து முடிப்போம் வாரீர்!!!

"கடல் போலும் எழுக! கடல் முழக்கம்போல்
கழறிடுக தமிழ் வாழ்கென்று!
கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!!"

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணகியின் தவறு ...

காலச் சக்கரம் சுழன்றது. கண்ணகி அறவோர்க்கு அளித்தலும், அந்தணர்ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்விருந்து தருதலும் செய்து பொருளை எல்லாம் இழந்தாள் எழு நிலை மாடத்திலிருந்தவள் ஓட்டுக்கூடத்திற்கு வந்தாள். மக்கள் அவளைக் கண்டு இரக்கப்பட்டனர். மாமனார் உதவி செய்ய முன் வந்தார். ஈயென இரத்தல் இழிந்தது என்று எண்ணிய அவள் கொள்ளேன் என்று மறுத்தாள். அவளுடைய இந்த நிலையை அண்ணல் காந்தியடிகளின் சாத்வீகப் போராட்டத்திற்கு ஒப்பிடலாம். அவள் அழுத கண்ணீரும் சிந்திய மூக்கும், பசலை படர்ந்த உருவமும், மக்களை மட்டுமின்றி. கோவலனை மனத்திலும்ஒரு மாற்றத்தைக் காட்டியது. இந்த எண்ணம் பிறிட்டு எழுந்த சமயத்தில் தான் அவன், இந்திர விழாவிற்குச்சென்றான். அங்குப் போட்டிப் பாடல்கள் நடைபெற்றன. குலமாதிற்கும், வேசியர் குடியில் பிறந்தவர்களுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சிந்திக்கலானான். நீதி நூல்கள் கூறியவைகளை அவன் நினைவுபடுத்திக்கொண்டான். அவன் உள்ள நிறைவினில் ஒரு கள்ளம் புகுந்தது. எந்த ஊடலுக்காகக்கண்ணகியிடம் ஏங்கினானோ அந்த ஊடலே அவனுக்கு இன்று கசப்பாகிவிட்டது. அவன் பிரிந்தான்.

கண்ணகியிடம் கோவலன் நடு இரவிலே வந்து "எழுக' என்றான். எழுந்தாள் "போவோம் மதுரைக்கு" என்றான். 'ஆம்" என்றாள். மதுரை சென்றாள், வழியில் கோவலன் கோசிகன்மூலம் மாதவி தூய்மையானவள் என்பதை அறிந்துகொண்டான்.

கண்ணகி, "எழு" என்றுசொன்னவுடன் எழுந்தது தவறு என்று கோவலன் மதுரைசென்றபின் அறிந்தான். கண்ணகியும் தான் தவறுசெய்துவிட்டாலும், அது அவனைப் பிரியாமலிருக்கச் செய்வதற்கே என்று கூறினாள். அவளுககுத்தெரியும், அவன்காலைவரை தான்ஊரில் இருந்திருப்பானேயானால் அவனுடைய ஐயம் பொய் என்பது வெளிப்பட்டுவிடும் பின்னர் மாதவியிடமே சென்றுவிடுவான் என்று அவள் மதுரை சென்றபின் தான், தன் தெய்வீகத்தன்மையை உணர்ந்தாள் அவள் அதை மறைத்து, கோவலனுடன் இனிக்க இனிக்கப் பேசி, அவனை மகிழ்வித்தாள். ஆனால் அது கோவலனுக்கு எமனாகவே வந்தது. அவள் சிலம்பில் ஒன்றை வாங்கிச் சென்று விற்க முற்பட்டவன், வஞ்சிக்கப்பட்டதனால் திருடன் என்று கூறப்பட்டவுடன் பேச்சினன்றி நின்றான். தெய்வம் பேசிவிட்டதைக்கண்ட கோவலன் பேச்சின் திறனை இழந்தான். கோவலன் கொலையுண்டான். இப்போது தெய்வக் கண்ணகிக்கு ஒரு பெரும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. கோவலன் திருடன் என்ற பழி ஏற்பட்டதல்லவா? இதை எவ்வாறு பொய் என்று நிலைநாட்டுவது? எனவே கண்ணகியின் உள்ளத்தில் ஆழ்ந்து பொதிந்து கிடந்த தெய்வத் தன்மை தனது பேரொளி பெற்றுக் கிளம்பி வழக்குரைத்தல் மூலம் கோவலனது குற்றமின்மையை நிறுவியது "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்" என்றதியதிப்படி கண்ணகியே அறதேவதையாகிப் பாண்டியன்முன் நின்றவுடன் அவனது ஆவி பிரிந்தது. மங்களவாழ்த்துப்பாடலில் கண்ணகியின் பெருமையை உணர்த்தக் கருதிய அடிகள் அவளை மானிடப் பெண்ணாகக் காட்டினாலும், அவளது மாண்பு தெய்வத் தன்மையுடையது என்றே புலப்படுத்தினார்: அத்தெய்வத்தன்மை மதுரைப் பாண்டியன் காலத்தில் வெளிப்பட்டுச் செயல்பட்டது. பின்னர் செங்குன்றம் சென்ற கண்ணகி அங்குத்தெய்வமாக ஊர்தி ஏறிச்சென்றாள் எனக் கூறுகிறார் அடிகள்.

பின்னர் மாதவியும் கோவலன் இறந்துபட்ட செய்தி கேட்டுத் துறவு பூண்டு, தவ வழியில் தலைப்பட்டனள் அவளது கருத்துக்கேற்ப மணிமேகலையும் இளமைத் துறவு மேற்கொண்டு இடையில் ஏற்பட்ட காம இடையூறுகளை வெற்றியுடன் கடந்து சமய உண்மைகளைக்கேட்டு பவத்திறம் நீங்க நோற்றுப் பரகதி அடைந்தனள் இங்ஙனமாகக் காப்பியம் முழுவதும் பேரின்பமாம் பிறவா இன்பப் பெற்றியே திகழக்காண்கிறோம். திருவள்ளுவர் காமத்துப்பாலில் தலைவன் தலைவி உறவு கூறுமுகத்தான் சீவான்மா பரமான்மாவில் என்றும் பரநிலையை விளக்கியதற்கு ஏற்ப இளங்கோவடிகளும் கண்ணகிக் கதையை மையமாகக் கொண்டு, வையத்துள் வாழ்வாங்கு வாழும் முகத்தான் தெய்வமாக முடியும் என்ற பெரும் பேரின்ப நிலை விளக்கியருளினார் என்று கொள்ளுவதே சாலவும் பொருந்துவதாகும்

கண்ணகியின் தவறு

கருமுத்து தி. மாணிக்கவாசகம், பி. ஏ.

சிலம்புச் செல்வி கண்ணகி, தாயகத்து மக்கள் தலை வணங்கும் கற்பரசி என்றும், அவள் குணக்குன்று என்றும், தவறே செய்ய முடியாதவள் என்றும், ஏடுகளில் படித்த உங்களுக்கு, இத்தலைப்பு வியப்பை அளிக்கும். ஆனால் இது முற்றிலும் உண்மை என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

•

கோவலன் சிலப்பதிகாரத்தின் தலைவன். தனது பதினாறும் ஆண்டில் பன்னிரண்டு வயதுடைய கண்ணகியை மணந்தான். எத்தனை ஆண்டுகள் அவர்கள் இருவரும் கூடி வாழ்ந்தார்கள் என்பதை அடிகள் கூறவில்லை. மணமாவதற்கு உரிய பருவம் பெண்களுக்கு 14 என்றும் ஆண்களுக்கு 18 என்றும் அன்று அரசியலார் நிர்ணயித்திருக்கிறார்கள். களவிற்குப்பின் காதல் ஏற்பட வேண்டுமானால், ஆணும் பெண்ணும் வயது வந்தவர்களாகவே இருக்கவேண்டுமென்ற காரணத்தால், சங்ககால இலக்கியத்தில் பொருள்தேடிய பின்னேயே மணம் செய்யும் வழக்கம் இருந்தது. ஆனால் வணிகக்குடியிலே பிறந்த காரணத்தால் கோவலன கண்ணகியை இளவயதிலேயே மணம் செய்துகொண்டான்.

களவிற்குப் பின் மணம் என்ற தமிழ் முறையைப் பின் பற்றுவிட்டாலும், கோவலன் கண்ணகியிடம் அன்பு பாராட்டினன். அவள் அழகை ஒயாரப் புகழ்ந்தான். அவளுடன் சிலவாண்டுகள் இன்பமும் அனுபவித்தான் "மண்மேல் நிலையாமை கண்டவர் போல் துன்னினர்" என்று கூறுகின்றார் அடிகள் இதனால் அவன் கண்ணகியிடம் உயிரையே வைத்திருந்தான் என்பதில் ஐயமில்லை.

கோவலன் மாதவியிடம் சென்று கண்ணகியை மறந்தான், இது அவனுடைய மாபெரும் தவறு என்று கூறப்படுகிறது. "பிறர் மனை நோக்காப் பேராண்மை உடையவன்தான் சான்றோன்". கோவலன் மாதவிபால் காமுற்றதனால் அவனைச் சான்றோர் வரிசையில் வைக்கமுடியாது என்று கூறப்படுகிறது. ஆனால், இங்கு ஓர் உண்மையை குறிப்பாக நோக்கவேண்டும் மாதவி பிறருடைய மனைவி அல்லள். அவள் கோவலனை மணம் புரிந்து கொண்டு மனைவியானாள். அக்காலத்தில் ஒருவர் இரு பெண்களை மணந்துகொள்வது சட்டவிரோதமன்று ஆகையால் பிறர் மனை நோக்கிய இராவணனை அவனுடன் ஒப்பு நோக்குதல் அறிவுடைமை ஆகாது. கோவலன் ஏன் கண்ணகியைவிட்டுப்பிரிந்து மாதவியிடம் சென்றான் என்பதை இதுவரை யாரும் அறுதியிட்டுக் கூறவில்லை. இதற்குக் காரணம் கண்ணகி தான், அறியாது செய்த ஒரு தவறாகும்.

கண்ணகியை மருளாத மான். தெவிட்டாத தேன், என்று கோவலன் பாடினனேயாயினும் அவன் அவளிடம் ஒரு பெரும் குறையைக் கண்டான். வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார் மண வாழ்க்கை இன்பமயமாகச் செல்ல வேண்டுமானால் ஊடலுக்குப் பின்தான் கூடலிருக்க வேண்டுமென்று கணவன் வருகின்ற காலத்து வழிமேல் விழி வைத்துக்காத்திருந்து, அவன் வந்தவுடன் அவனுடன் சிரித்துப் பேசி, அவன் பாராட்டுதல்களை எல்லாம் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளும் பெண்ணைக் கண்டு மக்கள் போற்றலாம் ஆனால் மணாளன் போற்ற முடியாது. இன்னல் காட்டி இன்பம் தரும் பேரின்பம் போல், சிற்றின்ப வாழ்க்கையிலும் துன்பத்தின் சாயல் தென்படவேண்டும் அந்தோ! கண்ணகி கோவலன் வாழ்க்கையில் ஊடல் இன்பமில்லை. கூடலும் நிலையாக நிலைத்து நிற்கவில்லை.

கண்ணகியை அடிகள் "மாதரார் தொழுது ஏத்தும்" பெண் என்று கூறுகின்றார். ஒரு பெண் மற்றொரு பெண்ணை. மனமார வாழ்த்தியதை வரலாற்று ஏடுகள் கூறியதாக நாம் கேட்டதில்லை. சீதை; பெண்களுக்குள் மிகவும் அழகானவள் என்று கூறவந்த கம்பன். "மங்கையர் காமுறும் சீதை" என்றுகூறி அவளது அழகைப்புகழ்கின்றான். இங்குக் காமவேட்கை தோன்றுகின்றதேயன்றி, புகழ்ச்சி தோன்றவில்லை. கண்ணகியைப் பார்க்கின்ற பெண்களுக்கு. அவள் அழகு தென்படாமல் அவளது குணம் தென்படுகிறது. தெய்வமோ என [illegible]ற்றி அவளை வணங்க அவர்கள் சிரம் தாழ்ந்துவிடுகின்றது. இதனை அடிகள் "மகாலட்சுமியை நாம் பார்த்ததில்லை. இவளைப் பார்த்தால் அவளைப் பார்த்ததுபோல்" என்று கூறி அவளது தெய்வத்தன்மையைக் கூறுகிறார்.

தெய்வ ஒளி வீசும் கண்ணகியைக்கண்ட கோவலன் அவளிடம் ஏதோ ஒரு குறை இருப்பதைக்கண்டான். அது என்னவென்றே அவனுக்குத் தெரியவில்லை. வணகத்திற்கு உரிய தெய்வமாகிவரும் கண்ணகி வாழ்விற்கு ஏற்றவளாயில்லை. இளமைக்கு உரிய பண்புகள் யாவுமின்றி, கண்ணகி, கோவலனுடன் தனி வாழ்க்கை நடத்தினாள். அவன் அவளை மான் என்றான், மயில் என்றான் அவள் பதில் பேசவில்லை. பேசாமடந்தையாக, அடங்கிய பெண்ணாக தெய்வ ஒளியுடன் அவள் வாழ்ந்து வரும் நாளில் கோவலன் மனத்தில் எழுந்த சூறாவளிக்காற்றை அவள் அறிய முடியவில்லை. மதுரை தத்துவத்தில் பேராசிரியராக இருந்த திரு சுந்தரம்பிள்ளை, ஆடவரின் மனம் இயற்கையாகவே அறநெறியினின்று வழுவும் தன்மையுடையது என்றும், அந்த மனம் சூறாவளிபோல் அலையும்போது மனைவிதான் நங்கூரமாய் நின்று அவனுடைய அறநெறியைக் காக்கவேண்டும் எனறும்கூறுகிறார். கண்ணகியின் கணவனின் மனமும் மாறத் தொடங்கியது, ஆனால் அவள் அதை உணரவில்லை இந்நிலையில் மாதவியின் தோழி கூனி 'பத்து லட்சம் பொன் கொடுத்து இம்மாலையை வாங்கத் தகுதியுடையவர்கள் இவ்வூரில் இருக்கிறார்களா? அப்படியானால் அவர்கள் இம்மாலையை வாங்கி மாதவியிடம் கொடுத்து அவளை மணம் புரிந்துகொள்ளட்டும்" என்றாள்.

கோவலன் மாதவியின் ஆட்டத்தைக் கண்டவன் "ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ பேடியரன்றோ பெற்றியினின்றிடில்" என்று கூறும் அழகையுடைய மாதவியைச் சிறிது எண்ணினான், அவன்மனம் சிறிது ஆட்டம் கண்டது. பின்னர் "இப் பெரும் பொருளைக் கொடுத்து வாங்கும் வணிகப் பெருமகன் இருக்கிறானா? — என்ற சொல் அவனை ஒரு குலுக்குக் குலுக்கியது" ஏன் நான் இல்லையா?" என்றான், இனம் தெரியாத ஏக்கமுடைய அவன் மாதவிபால் சென்றான். அவன் திரும்ப நினைத்தான் முடியவில்லை. இதனைத்தான் அடிகள் "விடுதல் அறியா விருப்பு" என்று கூறுகின்றார்.

ஏறத்தாழ 14 ஆண்டுகள் மாதவியிடம்வாழ்ந்தான் அங்குச் சிறுவயதில் எழாத ஐயம். அவனுக்கு வயது முதிர்ந்த காலத்து ஏற்பட்டது. மாதவி ஆடினாள், பாடினாள். அவன் மனம் மகிழ்ந்தான் ஆனால் அவன் உள் மனத்தில் ஏதோ ஓர் ஏக்கம குடி கொண்டிருந்தது. மாதவிக்கு ஒரு மகள் பிறந்தாள் அவளைச் சீராட்டி வளர்த்தான் அவல் அவள் பிறந்த நாள் விழாவில் செய்த தான தருமங்கள் அளவிட முடியாதன. அவள் பருவமங்கையானாள் பருவ மங்கைக்குத் தாயான மாதவிமேல் ஐயமுற்றான் கோவலன். இதற்குக் காரணம் என்ன?

கோவலன் சிறந்த பண்பாளன். இதற்குச் சான்றுகள் சிலப்பதிகாரம் தருகின்றது. யானையைஅடக்கிப் பிறரைக் காப்பாற்றும், தியாக புத்தியும் வீரமுமுடையவன். பொருளைப் பிறருக்கு வாரி வாரிக் கொடுக்கும் வள்ளல் தன்மை உடையவன். சுருங்கச் சொன்னால் அவன் ஒரு செம்மல். அவன் மாதவியிடம் வந்தபின் கண்ணகியைக் கைவிட்ட குற்றம். அவன் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. தாமரை இலைத் தண்ணீர் போல் மாதவியிடம், விடுதல் அறியா விருப்பினனாக இருந்தான் கோவலன். வாழ்விற்கேற்ற மனைவியைக் கண்ட அவன் தெய்வப் பண்புள்ள கண்ணகியைக் காண விரும்பவில்லை இகவாழ்வில் அவன் பெற விரும்பிய இன்பம், மாதவியின் பால் இருந்தது. கண்ணகி கோவில் கட்டி வழிபடும் தெய்வம் மறுப்பதற்கில்லை. ஆனால் அவள் வாழ்விற்குப் பயன்படவில்லை.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம் பார்க்க)

மனிதருள் மாணிக்கம் இயற்கை எய்திவிட்டார்.

இந்தியத்துணைக் கண்டத்து முதலமைச்சர் உயர்திரு சவகர்லால் நேரு அவர்கள்

27-5-'64 புதன் மாலை 2-30 மணி அளவில் பூதவுடல் நீத்து புகழுடம்பு எய்திவிட்டார்கள்.

இந்தியப் பெருநாட்டின் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்த அப்பெருமகனார் மறைவுச் செய்தி கேட்டு உலகம் முழுவதுமே ஆறாத்துயரத்தில் ஆழ்ந்து கிடக்கிறது.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத் தன்றே இவ்வுலகு"

தலைமை அமைச்சரின் மறைவுக்கு, 'குறள் நெறி' தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழால் முடியாதா?

— புலவர் வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.

இற்றை ஞான்று தமிழுக்கும் தமிழ் நாகரிகம், பண்பாட்டுக்கும் வந்துகொண்டிருக்கின்ற இடையூறுகள் பல. சமற்கிருதத்தால் தமிழ் அடைந்த கேட்டைச் சரி செய்ய இன்னும் நம்மால் இயலவில்லை. எது தமிழ்ச் சொல். எது சமற்கிருதச் சொல் என்று வேறுபடுத்திக் காண்பது தமிழ்ப் பெரும் புலவர்களால்கூட முடியவில்லை

அடுத்து ஆங்கிலம் வந்தது. அதனால்பல தீந்தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்தன இன்று தமிழ்ப்பேராசிரியர்கள்கூடத் தனித்தமிழில் பேசவோ எழுதவோ இயலாதவர்களாயுளர். தமிழ் வகுப்பில் விளக்கங் கேட்டால் ஆங்கிலத்தில் கூறுகிற அளவுக்கு மொழியறிவு குன்றிவிட்டது அது மட்டுமா? ஆங்கில உடையணிந்து கொண்டு ஆங்கிலேயரைப்போல் நடிக்கத் தொடங்கிவிட்டனர். ஏன்? பேராசிரியர் மட்டுமன்று, தொடக்கப் பள்ளி ஆசிரியரும் ஆங்கில உடையணிந்து அங்கொன்றும் இங்கொன்றுமாய் அரைகுறை ஆங்கிலம் பேசித் திரியும் அறியாமை மலிந்துவிட்டது

தமிழ் நாகரிகம் மறைந்து ஆரிய—ஆங்கிலக்கலப்பு நாகரிகம் தலையெடுத்து வருகின்றது. தமிழ்ப் பண்பாடு யாதென்றே பலர்க்குத் தெரியாது

'சாதி''ப் பட்டங்களை எங்ஙனம் படித்தவர்கள், சீர்திருத்தம் பேசுவோர் கூடவிடாது பெயர்கட்குப் பின்னால் ஒட்டிக்கொண்டே வருகிறார்களோ அது போன்றே கலப்பு நாகரிகம் நம்மைக் கவர்ந்துவிட்டது. இவற்றைக் களைந்து தமிழ் நாகரிகம் பண்பாட்டை நிலைநாட்ட வேண்டுமெனத் தமிழ் நெஞ்சமுள்ள சான்றோர் தத்தளித்துக் கொண்டிருக்கும் போழ்து வடவரது இந்தி புகுத்தும் பணி நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே போகிறது

இந்தியால் தமிழுக்கு வரும் கேட்டினைப் பண்டு தொட்டுத் தமிழ்ப் பெரியார்கள் பலரும் கூறியும் எழுதியும் வருகின்றனர். தி. மு. க. தோழர் தனித்து நின்று எதிர்த்தும் வருகின்றனர். பலர் சிறையிலும் தள்ளப்படுகின்றனர். இன்னும் பல தமிழ் ஏடுகள் எதிர்த்து ஆசிரிய உரைகள் எழுதி வருகின்றன. வடவர் சிறப்பாக இந்தி வெறியர்கள் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது இந்தியைப் புகுத்துவதில் முனைந்து நிற்கின்றனர். இந்தியப் பாராளுமன்றில் தங்களுக்குப் பெரும்பான்மை உறுப்பினர் இருப்பதால் இந்திபற்றிய எந்தச் சட்டத்தையும் எளிதில் நிறைவேற்றி விடுகின்றனர் சிறுபான்மையோர் எதிர்ப்புக் குரலுக்கு அவர்கள் செவிசாய்ப்பதே இல்லை.

பேராயக் கட்சி (காங்கிரசு) ஆட்சி ஒழிவதற்குள் நாவலந்திட்டு முழுவதும் (இந்தியா முழுமையும்) இந்தியைப் பரப்பிவிட்டு ஆங்கிலத்தை அகற்றிவிட வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோள். கேட்கின்றவர்கட்கு 1965க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும் என்கின்றனர். இதனால் என்ன தெரிகிறது? என்றைக்காவது ஆங்கிலம் ஒழிக்கப்படும் என்பது தெளிவாகிவிட்டது.

வடக்குக் கோடியில், சீனா போர்முனை யமைத்துக் கொண்டு இந்தியாவைத் தாக்கிக்கொண்டேயிருக்கிறது. காசுமீர் பற்றி பாகித்தான் கனன்றுகொண்டு இருக்கிறது. சீனாவுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியாவுக்கு இன்னல் விளைத்துக்கொண்டு இருக்கிறது; பல கல் தொலைவு ஊடுருவிவிட்டது. கிழக்குப் பாகித்தானிலிருந்து இந்துக்களை யெல்லாம் வெளியேற்றிக்கொண்டே வருகிறது இந்தியாவில் உள்ள மக்கள் உணவுப் பொருள்களின் விலை உயர்வால் படும் துன்பங்கள் அளப்பில. அயல் நாடுகளில் உள்ள இந்தியர்களையும். தமிழர்களையும் அந்தந்த நாட்டு அரசு வெளியேற்றி வருகிறது தமிழ் நாட்டு மக்கள், ஏன்? இந்திய மக்களும் வாழ வகையின்றித் திண்டாடுகின்றனர். கிழக்குப் பாகித்தானிலிருந்து விரட்டப்படும் வடநாட்டார்களை யெல்லாம் தமிழ்நாட்டில் குடியேற்றுகின்றனர். மதுரை— திருநகரிலும் குடியமர்த்தக் குடிசைகள் கட்டுகிறது அரசு. சென்னையில் நடைபாதைகளில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கும் வீடில்லாமல் அலைந்து திரிந்து இரந்துண்டு வாழும் தமிழ்க் குடும்பங்கட்கும் வீடுகள் அமைத்து உதவத் தமிழ்நாட்டு அரசுகூட முன்வரவில்லை. இந்தியாவின் வடகோடியிலிருந்து வருகின்றவர்கட்குத் தமிழ்நாட்டில் வரவேற்பு. தன் வீட்டாரை யெல்லாம் பட்டினி போட்டுவிட்டுப் பொதுத் தொண்டாற்ற புறப்பட்ட கதைபாகத்தான் இருக்கிறது. மக்களுக்கு இன்றைய ஆட்சியின்பால் உள்ள வெறுப்பு அளவு கடந்து நிற்பதை ஆட்சியாளர் அறியாது இருக்கின்றனர். நெருக்கடி மக்கட்கு நாளுக்கு நாள் மிகுந்து வருகிறது.

—தொடரும்

பாவேந்தர்க்கு இரங்கற்பா

வெண்ணிலவே! ஓடாதே கேண்மின் கேண்மின்
வெந்துநொந்து கூறுகின்றேன் பையக் கேண்மின்
எண்ணத்தை உருவாக்கு எந்தல் சான்றோர்.
எழிலோடு முன்னோரின் வழியைப் பற்றி
பண்ணிசைக்கும் கவித்தலைவர் பாரை விட்டு
பரலோகம் சென்றவரைப் பரிவாய்ப் பார்த்து
மண்ணுலகில் மொழிப்பற்றை வளர்ப்ப தற்கு
மாண்பாக வந்தனையோ என்று கேட்பாய்.

மொழிப்பற்று யில்லார்க்கு வழியைத் தேட
மௌனமாக மேலுலகம் சென்றாய் என்றும்
அழிவில்லா அருந்தமிழை பரப்புவ தற்கும்
அகல்விசும்பிற் அறவழியில் நின்றாய் என்றும்
இழிவகற்றி ஓயற்றமிழைச் செழிக்கச் செய்ய
இணையற்ற நெறிநாட பிரிந்தாய் என்றும்
மொழிப்பெருமை தேவருக்குச் சொல்வ தற்கும்
மேதினியை விட்டகன்றாய் என்று கேட்பாய்.

— வித்துவான். மு. குப்புசாமி

செதுக்காத சிலையானோம்—கண்ணில்
செந்நீரைத் தேக்கிநின்றோம்!
புதுவைக்குயில் பறந்தபின்னே—மண்ணில்
பொன்பொருளும் ஏதுக்கடா!

— மன்றவாணன்

தமிழுக்கு 'உயிரெ'ன்னும் பொருள்கண்டு
தமிழகத்தை உயிர்ப்பித் தாயே!
தமிழுக்குப் பகையென்றால் தாய்தடுக்கப்
பாராதே அழிப்பாய் என்றாய்!
தமிழுக்குப் புழுதியிடும் போலிகளை
நீபொறுக்காய்! தகைப்பாயன்றோ!
தமிழுக்கு உடன்பிறந்தோன் பகையென்று
தாழாதே செத்தாய் கொல்லேர்!

— கவிஞர். புலவர். ஆ. மணிவாசகன்

பூந்தமிழைக் கற்றுணர்ந்து பொங்குதமிழ்த்
தேன்சிந்தும்
தீங்கவிதை யாத்திட்ட தென்றமிழே—மாந்தரெலாம்
நின்று கதறியவர் நெஞ்சழியச் சென்றீரே
என்றும்மைக் காண்போம் இனி.

— வித்துவான். வாசுகிநாதன்

தமிழென்ற சோலைக்குள் இனிமை கண்டு,
தார்வேந்தன் போற்றிட்ட பெருமை கண்டாய்!
அமிழ்தான தன்மொழிக்குத் தாசனாகி
அனைவருமே பின்பற்றக் கருவி யானாய்!
குமிழான இதயத்தில் தேங்கி நின்ற
கொள்கையுடன் தமிழுக்கே உழைத்துக்
களைத்தாய்!
தமிழென்றால், உயிரென்றே பாடு பட்ட
தவப்புதல்வா! தனித்துநின்று விண்ணில்
வாழ்வாய்!

— இரா. சேதுராசன்

தீங்குநிறை உள்ளத்தைத் தேடிச் சுட்டுத்
தெருப்புழுதி யாக்கிவந்த திருவிளக்கே
பாங்குநிறை பைந்தமிழைச் சுட்டெரிக்கும்
பாமுலகை இனிமேலும் விரும்பு வாயோ?
பூங்குயிலே, புதுச்சேரிப் புலியே உன்றன்
பூவழகுப் பாவளத்தால் பொலிந்த நாடு
தாங்குகின்ற பெருந்துயரம் தணிவ தற்குத்
தக்கதொரு காலந்தான் வருதல் உண்டோ?

— காரை. கோ. பாரதி

எந்தமிழ் மொழியை எம்மரும் மூச்சை
இகழ்ந்தவன் தாயொரு பேயே
தென்தமிழ் நாட்டினில் தின்றவர் இன்னும்
தின்றிடின் மடையரே தமிழர்
பொன்னொடு வறுமை புகன்றனன் கவியால்
புவிப்புகழ்ப் பாரதித் தாசன்
இன்றொடு புகழை வளர்ப்பது நிறுத்தினன்
ஏறினன் புகழ்நிலை பெறற்கே.

— துரைமோகனன்

எதுவரினும் அஞ்சாமல் எண்ணத்தைச் சொல்லி
மதுமலரின் வாசம்போல் வாழ்ந்தாய்—புதுவைக்
கவிக்குயிலே! காலன் கவரச்சென் றாயோ,
புவிக்குரலில் துன்பமதைப் போட்டு!

சூழ்ந்த நிலையினிலே தோன்றிய புன்மைகளை
ஆழ்ந்த கருத்தாய் அறிந்தகற்றி—வாழ்ந்தவனே
நெஞ்சத்தில் என்றும் நிலையாக நின்றிடுவாய்,
செஞ்சொற் கவியாற் சிறந்து!

— 'தேவிதாசன்'

MTC
மதுரைத் தனிப் பயிற்சிக் கல்லூரி
Mathurai Tutorial College
தனித்தனிக் கவனிப்பு, தன்னிகரில்லாப் பயிற்சி.
XI Std., (S. S. L. C.); P. U. C.
B. A., B. Sc., B. Com., M. P. S. C., Matric (நேரிலும், அஞ்சல் மூலமும்)
சீரிய முறையில் பயிற்சி அளிக்கிறோம்.
விடுதி வசதி உண்டு ★ மகளிர்க்குத் தனி வகுப்பு ★ ஆய்வுக்கூட வசதியுண்டு
தகவல்; M. T. C.
G. K. S. Rest House, (Near College House)
TOWN HALL ROAD, MATHURAI-1.
கு. இளஞ்சேரன், எம். ஏ.
முதல்வர்.

...த்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண...தத்தான் தானே கெடும்

குறள் நெறி

தமிழ் வாழ்க

மலர் 1 | வைகாசி 19 (1-6-1964) | இதழ் 10

இந்தியைப்பற்றிய சொல்லும் செயலும்

சென்ற இதழில் அலுவலக நேரத்திலேயே இந்திமொழிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்துள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தோம். அதன்பின்னர் வெளிவந்துள்ள இந்திய அரசு அறிக்கை ஒன்றில் அலுவலகநேரமல்லாக்காலத்திலேயே இந்திமொழிப் பயிற்சி பெறுமாறு செய்துள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (At present classes are being conducted in many departments of the Union Government outside office hours to enable non-Hindi speaking people to learn Hindi) இக்குறிப்பில் 'எல்லா அலுவலகங்களிலும்' என்று குறிப்பிடாமல் "பல அலுவலகங்களில்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது நோக்கத்தக்கது. ஆகவே சில அலுவலகங்களில் அலுவலக நேரத்திலேயே இந்திமொழி கற்குமாறு செய்யப்பட்டுள்ளது என்பதுதானே வெளிப்படுகின்றது. நாம் அறிந்தவரையில் மதுரையில் உள்ள இந்திய அரசுத் துறை அலுவலகங்களில் உள்ளோர் அலுவல் நேரத்திலேயே இந்திமொழி பயில்கின்றனர் என்பது உண்மையே. அலுவலகங்களில் பணிபுரிவதற்காக ஊதியம் பெறுவோர் அலுவலக நேரத்தை வேறு முறையில் கழிப்பதற்கு வசதிசெய்து கொடுப்பது நல்லாட்சிமுறைக்கு ஒத்தது அன்று. பணிமுறை கருதி அளிக்கவேண்டிய ஊதிய உயர்வை வேண்டாத மொழியைப் பயிலச் செய்வதற்காக அளிப்பதும் அடாததாகும்.

"எல்லாத் தேசிய மொழிகளையும் சமநோக்குடன் நோக்குகின்றோம்; இந்திமொழிக்குரியரல்லார் இந்திமொழிபயிலுமாறுகட்டாயப்படுத்தப்படமாட்டார்" என்று மேடைகளில் முழங்குவதும் செயல் முறையில் அதற்கு மாறாக நடப்பதும் சொல்லும் செயலும் மாறுபடும் பெருங்குற்றத்திற்கு உரியன அன்றோ? சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக பேரரசுத் தலைவர்களே மேற்கொள்ள நேரின் ஏனைய மக்கள் என்னதான் செய்யமாட்டார். ஒழுக்கம் நிலைபெறுவதெங்கே?

இந்திய அரசு இவ்வாறு முறை திறம்பி இந்தி மொழியை விரும்பாதார் மீது சுமத்த வேண்டாம். "இந்திமொழி யறியாத ஊழியரிடம் எவ்வித வேறுபாடும் காட்டப்படமாட்டாது" எனக் கூறிய உறுதிமொழி என்னவாயிற்று? இங்கு," மும்மொழிக் கொள்கையே நம் திட்டம்" என்று கூறித் தமிழ் ஆங்கிலம் இந்தி என்பனவற்றைக் கற்கச் செய்யும் அரசினர், ஏனைய மாநிலங்களில் மூன்று மொழிகள் கற்பதற்கு என்ன செய்துள்ளனர்? இந்தி மொழி மாநிலத்தில் தென்னகமொழியொன்றைக்கற்பதற்கு வசதி செய்துகொடுத்துள்ளனரா? தென்னகமொழி ஒன்றைக் கற்போர்க்கு ஊதிய உயர்வு கொடுக்கப் படுமென்று அறிவிக்கப்படவில்லையே! இங்கு அலுவலகத்தில் உள்ளோர் இந்திமொழி பயில்வதற்கு வசதி செய்து கொடுத்துள்ளதுபோல் அங்குத் தமிழோ பிற தென்னக மொழியோ பயிலுவதற்கு வசதி செய்து கொடுத்துளரா? இல்லையே. இந்தி மொழிப் பயிற்சியில் ஆர்வம் காட்டும் நம் தமிழக அரசு, உடக்கே தமிழைப் பயிலச் செய்வதற்குக் கருத்துச் செலுத்தாதது ஏனோ? தென்னாட்டவர்க்குத்தான் மும்மொழித் திட்டம்; வடவர்க்கு இரு மொழித் திட்டம்தான் என்றன்றோ கருத வேண்டியுள்ளது. இத்தகைய பாகுபாடு இந்தி மொழியாரின் தனியாட்சிப் போக்கைத்தானே வெளிப்படுத்துகின்றது. இந்நிலையில் இந்திமொழியாளரும் ஏனைய மொழியாளரும் எங்ஙனம் ஒன்று கூடி வாழ இயலும், இந்திய ஒருமைப்பாடு நிலை பெறுவது எங்ஙனம்?

ஆகவே இந்திய அரசு இவ்வாறு இந்தி மொழிக்கு மட்டும் தனிச் சலுகை காட்டுவதை உடனே நிறுத்தல் வேண்டும்.

அன்றியும், விரும்பாதவரையும் இந்திமொழியால் பயன்பெறாதோரையும் இந்தி மொழி பயிலுமாறு செய்யும் திட்டத்தையும் உடனே கைவிடுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, திருச்சி அல்லது மதுரை வட்டாரத்திற்குள்ளேயே பணிபுரியப் போகும் அஞ்சல் நிலைய அலுவலர்களை எதற்காக இந்தி மொழி பயிலுமாறு வற்புறுத்தல் வேண்டும். தமிழ் நாட்டை விட்டு அயல் மாநிலங்களுக்குச் செல்லுவோராயிருப்பின் ஆங்கிலம் ஒன்றே போதும். அல்லது எந்த மாநிலத்திற்குச் செல்லுவாரோ அந்த மாநில மொழியைக் கற்குமாறு செய்தால் பயனுண்டு. இந்தி மாநிலத்திற்குச் செல்லுவோரை இந்தி மொழி பயிலுமாறு செய்தால் அதில் பொருளுண்டு. அங்ஙனமின்றித் தமிழ் மாநிலத்திலேயே பணிபுரிந்து ஓய்வுபெறப் போகின்றவரையெல்லாம் எதற்காக இந்தி கற்குமாறு செய்தல் வேண்டும்?

தமிழ் நாட்டில் பெரும்பாலோர் இந்திமொழி முதன்மைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர்; பல்லாயிரக் கணக்கில் சிறை புகுந்த வண்ணம் உள்ளனர். இவற்றையெல்லாம் நோக்காது மேலும் மேலும் இந்தி முதன்மையை வன்முறையாக நிலைநாட்டுவது குடிதழுவிக் கோலோச்சும் மக்களாட்சியாகாது. சொல் வேறு செயல் வேறு என்ற நிலை மாறிட வேண்டும்.

வினைத்தூய்மை

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" ஆகவே பொருளை ஈட்டாது நல்வாழ்வு பெறுதல் இயலாது. பொருளை யீட்டுதற்கு ஏதேனும் ஒரு செயலில் ஈடுபடுதல் வேண்டும். அச்செயல் குற்றம் அற்றதாய்ப் பிறர்க்குத் தீங்கு பயவாததாய் உழைப்புக்கேற்ற ஊதியம் அளிக்கவல்லதாய் இருத்தல் வேண்டும். இதனையே "வினைத்தூய்மை" என்பர் தமிழ் மறையாளர்.

எத்துறையில் ஈடுபடினும் வினைத்தூய்மை வேண்டும். வினைத்தூய்மை பொருந்தாது ஈட்டப்

படும் பொருளை "பழிமலைந்து எய்திய ஆக்கம்" என்பர் திருவள்ளுவர். அதனினும் வறுமையே சிறந்தது என வலியுறுத்துவர் அப்பெரியார்.

"பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல்குரவே தலை"

வழி யல்லா வழியில் பொருளீட்டி வாழாது வறுமையிற் கிடந்துழல்வோரைச் சான்றோர் என அழைக்கின்றார் அப்பெருந்தகையார். வறுமையால் வாடிப் பெருமையுறு சான்றோர் என அழைக்கப் படுதலினும் வளமான வாழ்வு எளிதில் பெறுதலையே எவரும் விரும்புகின்றனர். ஆகவே இருட்டுவாணிப மும்கையூட்டு (இலஞ்சம்) முறையும் தனியாட்சி புரிகின்றன.

இருட்டு வாணிபத்தால்பொருளீட்டுவோரைப் பலரறியப் பொது இடங்களில் நிறுத்திச் சுட்டுக் கொல்லுதல் வேண்டும் என நமது மதிப்புக்குரிய திருவாளர் நேரு அவர்கள் முழங்கிய காலமும் உண்டு.

"கையூட்டு ஒழித்தல்" இன்று எங்கும் பேசப் படுகின்றது. திருவாளர் நந்தா அவர்கள் கையூட்டு ஒழித்தலைப் பெருங் கடனாகக்கொண்டு செயலாற் றத் தொடங்கியுள்ளார். தம் காலத்தில் கையூட்டு ஒழிக்கப்பெறவில்லையேல் தம் அமைச்சர் பதவியை யும் விட்டுவிடப்போவதாக வஞ்சினம் புகன்றுள் ளார். ஆங்காங்கு, கையூட்டு ஒழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கையூட்டு ஒழிப்புக் குழுவில் உள்ளோர் கையூட்டுப் பெற மாட்டார் என்பதற்கு என்ன உறுதி?

கையூட்டுப் பெறுவதன் அடிப்படைக் கார ணங்களை அகற்றினலன்றி அதனை ஒழித்தல் எக்கா லத்தும் இயலாது.

வரவுக்கு மிஞ்சிய செலவும், பகட்டான வாழ் வும் செல்வப்பெருக்கால் அடையும் சிறப்புமே கையூட்டுப் பெறுதலுக்கு அடிப்படைக் காரணங் களாகும்.

ஆட்சித்துறையில் பணிபுரிவோர் பலர்க்குத் தாம்பெறும் ஊதியத்தைக்கொண்டு குடும்பவாழ்வு நடத்தமாட்டாது அல்லல் உறுகின்றனர். இந்நிலை நீடிக்கும்வரை கையூட்டை ஒழிக்க எவராலும் இயலாது ஆகவே, பணிபுரிவோர்க்கு கால நிலைக் கேற்பப் போதுமான அடிப்படை ஊதிய வரை யரை ஏற்படுத்துதல் வேண்டும். பட்டினியால் வாடும்போது கிட்டிய பொருளை விட்டுவிட எவர் தாம் முன் வருவர்? நீரில் அமிழ்கின்றவர் கைக்குக் கிட்டியதைப் பற்றிக்கொண்டு கரையேற முயல் வது போன்று வறுமையில் வாடுகின்றவரும் அகப் பட்டதைப் பற்றிக்கொண்டு அல்லல்போக்க முயல் கின்றனர். ஆகவே அலுவலகங்களில் பணிபுரி வோர்க்குப் போதுமான ஊதியத்திட்டம் வகுத்தல் வேண்டும்.

பகட்டான வாழ்வின் புன்மையை உணருமாறு செய்தலும். பொருளல்லவரைப் பொருளாக மதித் துப் போற்றும், இழிதகைமையை எள்ளிக்கை விடு மாறு செய்தலும் மேற்கொள்ளப் பெறுதல் வேண் டும். விலையுயர்ந்த ஆடைகளையும் அணிகலன்களை யும் ஊர்திகளையும் பெற்றிருப்பதால் மட்டும் மக்க ளிடையே மதிப்புப் பெறலாம் என்ற எண்ணத்தை மாய்த்தல் வேண்டும். ஒழுக்க நலங் குன்றியோரை உயர்வாக மதித்தலை விட்டொழித்தல் வேண்டும். "பணம் பந்தியிலே" என்ற பழமொழிக்கு இடமில் லாது செய்தல் வேண்டும். இன்று என்ன இழி செயல் புரியினும் 'பணம்' இருந்தால் போதும் பாரில் செல்வாக்குப் பெறலாம் என்ற நிலையிருப் பதனால்தான் எவ்வழியினும் பொருளீட்ட முயல் கின்றனர். ஆகவே பணப் பெருக்கின் மதிப்பைக் குறைத்து ஒழுக்க மேம்பாட்டின் சிறப்பை மிகுத் தல் வேண்டும்.

இடுக்கட்படினும் இளிவந்த செய்யாத உளப் பாங்கை இளமையிலிருந்தே கொள்ளுமாறு கல் விப் பயிற்சி யளித்தல் வேண்டும். மனத்துக்கண் மாசிலாத வாழ்வுக்குத் தம்மை உரிமையாக்கிக் கொள்ளுமாறு செய்தல் வேண்டும். கற்றவர் கற்ற வாறு ஒழுகுவதற்குத் துணிவு பெறல் வேண்டும் கற்றவர் கற்றவாறு ஒழுகாமையால்தான் இன்று பல ஒழுக்கக்கேடுகள் நிலை பெற்றுள்ளன. ஆத லின் கற்றவாறு ஒழுகுதலையே கல்விப்பயிற்சியாகக் கொள்ளும் கல்வித்திட்டம் வகுத்தல் வேண்டும். இளமையிலிருந்தே திருக்குறளைப் பயிலுமாறு செய்து அதன் நெறியில் ஒழுகும் பயிற்சியை அளித் தல் வேண்டும்.

"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

என்பதை வாழ்வு நெறியாகக் கொள்ளல் வேண் டும். (பிறர்) "அழக்கொண்ட எல்லாம் (நாம்) அழப்போம்" என்பதனைத் தெளிந்து செயலாற் றும் உளத்தைப் பெறச்செயல் வேண்டும்.

"என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றிபயவா வினை"

என்பதனை உறுதிமொழியாகக் கொண்டு வாழ்தல் வேண்டும் இவ்வாறு வினைத்தூய்மை பெற்று வாழ்ந்தால் அன்றிக்கையூட்டு (இலஞ்சம்) ஒழி யப்போவதின்று. கையூட்டு ஒழிப்புக்குழுக்கள் கணக்கின்றித் தோன்றினும் பயனின்று. திரு நந்தா வின் வஞ்சினங்களும் நாடிய பயனைத்தாரா, புண் வைத்துப் புறம் மூடுவதால் பயனுண்டோ?

ஹௌரா திருவள்ளுவர் கலைமன்றம், கல்கத்தா.

கம்பன் திருநாள்

ஏப்ரல் 14, 19 ஆகிய இரு தினங்களிலும் கம்பன் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விருதுநகர் செந்தில் குமரன் கல்லூரித்தமிழ் விரிவுரையாளர் "செந் தமிழ் ஞாயிறு" வித்துவான் திரு. ந. சேதுரகுநாதன் சிறப்பு விருந்ினராகக் கலந்துகொண்டு, முதல் நாள் "கவிக்கு நாயகன்" என்னும் தலைப்பிலும், இரண்டாம் நாள், தலைவர் திரு. காமராசர் அவர்களது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, "தியாகத் தம்பியர்" என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்திற்கு மன்றத் தலைவர் திரு. அண்ணாமலை தலைமை வகித்தார். திரு டி. வி. இராசனும், திரு இராம மூர்த்தியும் சிறப்பு விருந்தினரைப் பாராட்டிப் பேசினர். செயலர் திரு தண்டபாணி நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது மொழி வாழ்த்துடன்.

இளந் தமிழ் ஆசிரியர்களுக்கு இன்னல்

தமிழ்க் கல்லூரிகளில் நான் ஆண்டுகள் சிறப்புறப் பயின்று, வித்வான் பட்டம் பெற்ற, பயிற்சி பெறாத இளந்தமிழ் ஆசிரியர்கள் சென்னை மாநிலத்தில் உள்ள உயர் நிலைப்பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் ஏராளமாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுடைய எண்ணிக்கை சுமார் 950 ஆகும். அவர்கள் வேலை நிரந்தரமாக்கப்டுவதற்கு இதுகாறும் பயிற்சி தேவையென வலியுறுத்தப்படவில்லை ஆயின் தற்பொழுது கல்வித்துறையினர் 1—6-60ற்குப்பின் வேலைக்கு அமர்த்தப்பெற்ற பயிற்சி பெறாத இளந்தமிழ் ஆசிரியர்கள் அனைவருக்கும் [All untrained grade ii Junior (Tamil Pandits] கல்வியாண்டின் கடைசி நாளன்று. வேலைநீக்க ஆணை [Ousting Order] தருமாறும், விடுமுறைக்கால ஊதியம் (Vacation salary) வழங்காது இருக்குமாறும் பள்ளி நிருவாகிகளைப் பணித்துள்ளனர். அரசு ஆணைப்படி இவர்கள் பணிபுரியும் காலத்து நிர்ணயிக்கப்பட்ட ஆரம்பச் சம்பளமே பெறுவதற்குத் தக்கவர்கள் ஆவர். அரசு ஆணையினால் தற்பொழுது பணியினின்றும் நீக்கப்பட்டுள்ளனர் இனி இவர்கள் பயிற்சி பெறும்வரை ஆண்டாண்டுதோறும் விண்ணப்பித்து, காட்சித் தேர்விற்குச் சென்று (Interview) சான்றிதழ்களைச் சமர்ப்பித்து வேலை பெற வேண்டும் எப்பொழுதும் ஆரம்பச் சம்பளமே புதிதாகச் சேருகின்றவர்கள் போலப் பெறவேண்டும். பணியாற்றுங் காலமும் வீணாகும் வருடாந்திர ஊதிய உயர்வும் (Increment) வழங்கப்படமாட்டாது. ஆனால் இரண்டாம்பிரிவு இளந்தமிழ் ஆசிரியர்கட்குப்பயிற்சித் தகுதியே தேவையில்லை ஏனெனில் அவர்கள் பயிற்சி பெற்றுவிட்டால் முதற் பிரிவு அனைத்துத் தகுதியும் பெற்ற (Fully qualified grade I) தமிழாசிரியர்களாக மாறுவர் அதனால் ஊதிய விகிதமும் உயர்த்தப்படும் சில பள்ளிகளில் முதல்தர ஆசிரியர் தகுதி உள்ளவர்களுக்கு (First grade Tamil Pandits) இரண்டாந்தர ஆசிரியர் பணியைக் கொடுத்து அவர்கள் முன்னேற்றம் ஊதியம், ஆகியஇவற்றைக் கெடுத்து விடுகின்றனர் இன்னும் சில பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்களது சம்பளத்தில் பங்கு எடுத்துக்கொண்டும், பணிக்குச் சேருகின்றபொழுது தேதியிடாத ராசினாமாக் கடிதத்தையும் வாங்கிவைத்துக்கொண்டு அச்சுறுத்தியும் அதிகப்பணி தந்தும், அல்லல் தந்தும், ஆசிரியச்சமூகத்தின் சாபத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனால் கல்வித்தரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது மேலும் தமிழாசிரியர்களுக்குத் தேர்வுத்தாள் திருத்தும்பணியும் நிறையக் கொடுக்கப்படுகின்றது அத்துடன் கட்டுரை ஏடுகள், திருத்துவதற்கு வரம்பற்ற முறையில் கொடுக்கப்படுகின்றன இத்தகைய துன்பங்களே தமிழாசிரியர்களின் நீங்காத செல்வமாக நிறைந்து வழிகின்றன.

வேறுபாடு இல்லை சமத்துவமே!

1. S. S. L. C. + M.P.Sc., தேர்ந்த கீழ்நிலை எழுத்தர்க்கு ஊதியம் ரூ. 105 -
2. S. S. L. C. + Secondary Grade Training பயின்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் ரூ. 105 -
3. S. S. L. C. தேர்ந்த தற்காலிக 'எம்ப்ளாய்மெண்ட்எக்சேஞ்சு'பரிந்துரைத்தஎழுத்தர்களுக்கு ஊதியம் ரூ 105/-
4. S. S. L. C. + வித்துவான் (Four years) பயின்ற ஆசிரியர்களுக்கும் ஊதியம் ரூ. 105/-

எல்லோரையும் பாதிக்காத உத்தரவுகள் அதிக காலம் பயின்ற புலவர்களைமட்டும் பாதிக்கின்றன ஊதியமும் மிகக் குறைவு. உமைப்போ

எம். ஆர். கணபதி அய்யர்

பெரிது! இந்த சமத்துவமானது சாய்க்கப்பட்டு வேறுபாடு காட்டப்படுவது பெரிதும் வரவேற்புக்கு உரியதாம்.

மதிப்புக்கும் குறைவு.

1. S. S. L. C. யுடன் வித்வான் பயின்றவரை, P.U.C. படித்தவர்க்குச் சமமாகக்கூட மதிக்காத நிலைமை மாயவும், மறையவும் வேண்டும்.
2. பள்ளிகளில் வருகைப் பதிவுப் பட்டியலிலும். ஊதியம்பெறுவோர்ப் பட்டியலிலும் முதலில் B.T. ஆசிரியர்களும் அடுத்து 'செகண்டரி கிரேடு' ஆசிரியர்களும், பின்னர்த் தமிழாசிரியர்களும் இடம் பெறுகின்றனர் இவர்கள் தச்சு, நெசவு, உடற்பயிற்சி, ஓவியம் போன்ற கலைத் தொழில் ஆசிரியர்களுடன் ஒப்ப எண்ணப்பட்டு, ஒதுக்கப்பட்டுள்ளனர். எனவே தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்பிக்கும், தமிழாசிரியர்களின் தரங் குறைக்கப்படுகின்றது; மதிப்பும் பறிக்கப்படுகின்றது என்பதை அரசினர் உணர்தல் வேண்டும் என்பதாம்.

மேற்கூறிய பட்டியல்களில் தலைமையாசிரியருக்குஅடுத்தபடியாகத் தமிழாசிரியர்களின் பெயர் இடம்பெறுதல் வேண்டும். அதற்குக் கல்வித்துறையினர் ஆவனசெய்தல்வேண்டும்.

பணிப்பளு தலையிலே! பாதகம் நிலையிலே!

தமிழாசிரியர்கள் வகுப்பாசிரியர்களாக இல்லாத காரணத்தினால் அவர்கட்குத் தனிப்போதனை வாயிலாக மேல்வருவாய்சிறிதும் கிடைக்க வழியின்றிப் போகின்றது. தவிர, கீழ் வகுப்பிற்கும் மேல் வகுப்பிற்கும் செல்லும் தகுதிபடைத்த தமிழாசிரியர்களை, Secondary Grade ஆசிரியர்கள் விடுமுறை எடுத்தாலும் B. T. ஆசிரியர்கள் விடுமுறை எடுத்தாலும் அவர்களுக்குப் பதிலாகப் பணி புரிய (Acting work) அனுப்புகின்றனர். இங்ஙனம் இழுத்ததிக்கெல்லாம் இசைந்து வரும் தமிழாசிரியர்கள். இன்று இயம்பவொண்ணா அளவிற்குப் பெரிதும் இன்னல் உறுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் அவர்களைப்பணியிலிருந்து நீக்குமாறு அரசு ஆணை பிறப்பித்திருப்பது, வெந்த புண்ணில் வேல்கொண்டு பாய்ச்சுவதை ஒக்கும் இந்த நிலை மாறாவிடில் எல்லாத் தமிழாசிரியர்களும ஒன்றுகூடி, வேலை நிறுத்தம் செய்ய நேரிடும் என்பதை மிக்க வேதனையுடன். அரசினருக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

வேண்டுகோளும் கையறுநிலையும்.

1. B T. ஆசிரியருக்குத் தரப்படுவதுபோல மூன்று மாதக் குறுகிய காலப் பயிற்சி வேண்டும்.
2. அல்லது ஐந்து மாதக் குறுகிய காலப்பயிற்சியை எல்லா B. T ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளிலும் தோற்றுவிக்கவேண்டும் சான்றிடங்களில் உள்ளவகுப்புக்கள் மிகவும் குறைவு. எண்ணிக்கையைப் பெருக்கவேண்டும்.
3. விண்ணப்பிக்கும் எல்லா இளந் தமிழாசிரியர்களுக்கும், மறுப்பின்றி இடம் வழங்கவேண்டும். செல்வத்தின் செல்வாக்கும், பரிந்துரையும் புறங்காட்டி ஓடவேண்டும்.
4. பயிற்சி பெறுவதற்குக் கூடிய காலவரையறையை நிர்ணயித்து, அதுவரை இளந் தமிழாசிரியர்களுக்கு எல்லா நன்மைகளும் முட்டின்றிக் கிடைக்க ஏற்பாடு புரிய வேண்டும்.
5. தமிழுக்கு ஆட்சிமொழித் தகுதி உள்ளபடியே வழங்கப் பெற்றுத் தமிழ் போதிக்கின்றவர்களுக்குத் தக்க பாதுகாப்புத் தந்து, தமிழ்க் கல்வி பெரிதும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
6. நாள்தோறும் செய்தி ஏடுகள் வருவதுபோல, தமிழாசிரியர்களுக்குப் புதிய புதிய ஆணைகள் அனுப்பப்படுவதுநிறுத்தப்படவேண்டும்.

(15—5—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

— பேராசிரியர் சி. இலக்குவனார்

ட, ர, எனும் இவை மொழிமுதல் எழுத்துக்களாக வருதல் இல்லை. 'ள்'க்குப்பிறகு 'ட'வும் 'ள்'க்குப் பின்னர் 'ர'வும் வருதல் இல்லை. ஆனால் "வல்லெழுத்து இயையின் டகாரம் ஆகும்" எனும் இடத்திலும் 'அவற்றுள். ரகார ழகாரம் குற்றொற்று ஆகும்' எனும் இடத்திலும் விதிக்கு மாறாக வந்துள்ளன. இந்நூற்பாக்களில், ட, ர, என்பனவற்றின் இயல்பு விளக்கப்படுகின்றது. ஆதலின் குற்றம் இன்று.

இந்நூற்பாவில் வந்துள்ள "மானம்" எனும் தமிழ்ச்சொல்லை 'ஆனம்' எனும் வடசொல்லாகக் கூறுவர் சிலர். அவ்வாறு கூறுவது தவறு. 'மானம்' எனும் தமிழ்ச்சொல்லுக்குப் பெருமை, சிறப்பு, குற்றம் எனும் பல பொருள்கள் உள.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்." (969)

எனும் குறட்பாவில் வரும் 'மானம்' எனும் சொல்லுக்குக் 'குற்றம்' எனும் பொருளே மிகப்பொருத்தமுடையதாக உளது. "மானம் வரின்" என்பதற்குப் "பெருமை கெடவரின்" என்று பொருள் கூறுவதினும், "குற்றம்வரின்" என்று கூறுதலே இயல்பாக உள்ளது,

48. ய, ர, ழ என்னும் மூன்றும் முன்னொற்றக்
க, ச, த, ப, ங, ஞ, ந, ம ஈரொற்றாகும்.

ய, ர, ழ என்னும் மூன்றும்=ய, ர, ழ என்று சொல்லப்படும் மூன்று மெய்களும், முன்ஒற்ற=குறிற்கீழும் நெடிற்கீழும் (யாதானும் ஒன்று) முன்னே ஒற்றாய் நிற்க, (அவற்றின் பின்னர்) க ச த ப, ங ஞ ந ம=க, ச, த, ப என்பவற்றுள் ஒன்றோ, ங ஞ ந ம என்பவற்றுள் ஒன்றோ ஒற்றாய்வர, ஈர் ஒற்றாகும்=அவை ஈர்ஒற்று உடன் நிலையாகும்.

காட்டு: **வேய்க்குறை. வேய்ங்குறை:** *'ய்' எனும் ஒற்றுக்குப் பின்னர் 'க்' 'ங்' வந்து ஈர் ஒற்றாய் (ய்க், ய்ங்) நிற்கின்றன.*

49. அவற்றுள்
ரகார ழகாரம் குற்றொற்று ஆகா.

அவற்றுள்=மேற்கூறப்பட்ட ய, ர, ழ எனும் மூன்றனுள்ளும் ரகார ழகாரம், =ர, ழ எனும், இரண்டும், குற்று ஒற்றாகா=குறில் எழுத்தின் பின்னர் மெய்யாக வாரா.

தார், தாழ் என வருமேயன்றி தர், தழ் என வருதலில்லை,

50. குறுமையும் நெடுமையும் அளபிற் கோடலின்
தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல.

குறுமையும்=குறில்தன்மையும், நெடுமையும்=நெடில்தன்மையும், அளவிற்கோடலின்=எழுத்துக்கள் பெற்றுவரும் ஒலி அளவால் கொள்ளுதலின், தொடர்மொழி எல்லாம்=இரண்டுக்குமேற்பட்ட எழுத்துக்களால் ஆகிவரும் சொற்கள் எல்லாம், நெட்டெழுத்து இயல=நெட்டெழுத்தின் தன்மையை உடையனவாகக் கருதப்படும்,

புகர், புகழ் எனும் சொற்களுள் ர், ழ் வந்துள்ளன. இரண்டு குற்றெழுத்துக்களின் பின்னர் இவை வந்துளவேனும், நெடிற்கீழ் வந்துளதாகக் கருதப்பட்டு இலக்கண முடிபுகள் கொள்ளப்படும்,

51, செய்யுள் இறுதிப் போலி மொழி வயின்
னகார மகாரம் ஈரொற்று ஆகும்.

செய்யுள் இறுதி=செய்யுளின் இறுதியில் வரும் போலி மொழிவயின்='போலும்' எனும் சொல்லினிடத்து, னகாரம் மகாரம்=ன், ம் எனும் இரண்டும் ஈரொற்றுஆகும்=இரண்டுமெய்களும்சேர்ந்துவரும் நிலையினது ஆகும்.

காட்டு: போன்ம்: 'போலும்' என்பது
'போன்ம்' என வந்துள்ளது.

52. னகாரை முன்னர் மகாரம் குறுகும்.

மேலே கூறப்பட்டுள்ளவாறு, னகாரை முன்னர்=னகரத்து முன் வந்துள்ள, மகாரம்=ம, குறுகும்=தனக்குள்ள அரை மாத்திரையில் குறைந்துவரும். இங்கு மகரம் (ம்) தனக்குள்ள மாத்திரையில் குறைந்துவரும் எனக்கூறினாரேனும், சார்பு எழுத்து என்று கூறினாரிலர். ஆனால் தொல்காப்பியர்க்குப் பின்னர் வந்த பவணந்தியார் தமது நன்னூலில் ஓசை குறைந்து வரும் இம்மகரத்தைச் சார்பு எழுத்து எனக் கூறியுள்ளார்.

பவணந்தியார் கூற்றுத் தவறுடைத்தாகும். சார்ந்துவரும் இயல்பினையுடையனவே சார்பு எழுத்து எனப்படும். இம்மகரம் ஓசையில் குறைந்து வரினும் பிற எழுத்தைச் சார்ந்து வந்திலது. ஆகவே சார்பு எழுத்து எனப்படாது.

53. மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்,
எழுத்தியல்திரியா என்மனார் புலவர்.

மொழிப்படுத்து=எழுத்துக்களைச் சொற்களில் சேர்த்து. இசைப்பினும்=சொல்லினும். தெரிந்து=எழுத்துக்களைத் தனித்தனியே எடுத்து, இசைப்பினும்=சொல்லினும், எழுத்தியல்=எழுத்தின் தன்மையிலிருந்து, திரியா=வேறுபடா, என்மனார் புலவர்=என்று கூறுவர் புலவர்.

ஆங்கிலத்தில் எழுத்தினைத் தனியாகச் சொல்லும்போது ஒருவகையாகவும் சொற்களில் பயிலும்போது ஒருவகையாகவும் சில எழுத்துக்களை ஒலிக்கின்றோம். எடுத்துக் காட்டாக C, F, W, Z, போன்ற எழுத்துக்களை நோக்குக. தமிழில் இந்நிலை கிடையாது. தனியாகக் கூறும்போது என்ன ஒலியினைப் பெறுகின்றதோ அதே ஒலியைத்தான் சொற்களில் பயிலும்போதும் பெற்றுள்ளது. சில இடங்களில் வல்லினம் மெல்லினத்தைச் சாரும்போதும் 'ப' ஆய்தத்திற்குப் பின்னர் வரும்போதும் எழுத்தொலிகளில் சிறிது வேறுபடும். அங்ஙனம் வேறுபட்டாலும் எழுத்தின் இயல்பு வேறுபடாது.

'க' என்பது 'இங்கு' என்ற சொல்லில் 'G' ஒலியும், 'அக்கா' என்ற சொல்லில் 'K' ஒலியும், 'அகம்' என்ற சொல்லில் 'H' ஒலியும் பெற்றும், அது வல்லினம் என்றுதான் அழைக்கப்படுமே தவிர பிறவகையாக அழைக்கப்படாது.

(தொடரும்)

குற்றியலுகரமும் பாவேந்தரும்

க ஞர் முருகுசுந்தரம், எம். ஏ.,

'முல்லை' என்ற திங்களிதழில் பாவேந்தர் பாரதி தாசனாரின் மீசையைப் பற்றிப் பத்து எண்சீர் விருத்தங்கள் எழுதியிருந்தேன் அப்பாடலைப் பார்க்கும் வாய்ப்புப் பாவேந்தருக்கு ஏற்பட்டது. அப்பாடலைப் படித்ததும் அவர் என்னைக் கேட்ட முதல் கேள்வி, "எனது மீசையைப்பற்றிப் பாடல் எழுத வேண்டுமென்ற எண்ணம் உனக்கு ஏன் ஏற்பட்டது?" என்பதுதான்.

"மேலைநாட்டில் வோர்ட்ஸ் வொர்த் என்ற கவிஞன் வாழ்ந்த காலத்தில், அவன் மூக்கைப்பற்றிக் கவிதை எழுதி அந்நாட்டு மக்கள் பாராட்டினர்; கீட்ஸ் என்ற ஓர் ஆங்கிலக் கவிஞன் வாழ்ந்தான்; அவன் தலைமுடி பொன்நிறமானதா? கருநிறமானதா என்று அறிய இன்று ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அப்படியிருக்கும்போது உங்கள் தோற்றத்துக்கே பெருஞ் சிறப்புத் தரக்கூடிய மீசையைப்பற்றிக் கவிதை எழுதினால் என்ன? என்று ஓர் எண்ணம் என் உள்ளத்தில் தோன்றியது அதனால் எழுதினேன்" என்று விடையிறுத்தேன்

"உனது பாட்டில் இலக்கிய நயம் மிகுந்து காணப்படுகிறது. எனது மீசைக்கு நீ வெளவாலை உவமை கூறியிருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது ஆனால் உனது பாட்டில் குற்றியலுகரப் பிழைகள் காணப்படுகின்றன. அப்பிழைகள் நேராதவாறு இனிப்பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று கூறினார் உடனே ஒரு தாளை எடுத்து குற்றியலுகர இலக்கணத்தை விளக்கி எடுத்துக் காட்டினார் பாடலில் குற்றியலுகரப் பிழைகள் நேரும்போது, அதைக் கருத்துக்கெடாமல் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதையும் பல எடுத்துக்காட்டுகளால் விளக்கினார்கள். பிறகு மொழிப் புலமை ஒரு கவிஞனுக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை விளக்கத் தமது வாழ்க்கையிலிருந்து பல நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினார்கள்

அவர் கூறியதாவது :

"இலக்கணப் புலமை இல்லாத கவிஞன் புலவர்கள் நடுவே சிறப்புப் பெற முடியாது இப்போது பாடல் எழுதுவோர் இலக்கண வரம்பைச் சரியாகக் கவனிப்பதில்லை. அதுவும் குற்றியலுகரத்தைப் பொருட்படுத்துவதில்லை. தமிழகத்தில் விளம்பரம் பெற்ற கவிஞர்கள் கூடச் சிலர் குற்றியலுகரப் பிழையோடு எழுதுகின்றனர்.

பாரதியார் கூடத் துவக்க காலத்தில் இல்க்கணத்தைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படமாட்டார்! சுட்டுச் சொல்லுக்குப் பின் வல்லினம் மிகும். அங்கு+போனான் =அங்குப்போனான் என்று எழுத வேண்டும் ஆனால் பாரதியார் அங்கு போனான் என்றே எழுதுவார். பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில், பூ. ஆ. பெரியசாமி பிள்ளை, பங்காரு பத்தர், திருப்புளிசாமி ஐயா ஆகிய தமிழறிஞர்கள் அங்கு வாழ்ந்தனர். மூவரும் எனது தமிழாசிரியர்கள் திருவாளர் பெரியசாமிபிள்ளை கால்வே கல்லூரியில் புலவர் வகுப்புக்கு ஆசிரியர்; பெரும் புலமை வாய்ந்தவர். இவருக்கு ஒப்பாக மற்றொருவரை அக்காலத்தில் சொல்ல வேண்டுமென்றால் திரு அரசஞ் சண்முகனாரைத்தான் சொல்ல வேண்டும்.

பெரியசாமிப் புலவர் பாரதியார் செய்யும் இலக்கணப் பிழையைப் பார்த்துவிட்டு, "இவனெல்லாம் பாட்டெழுத வந்திட்டா, இலக்கணம் தெரியாம......" என்று சினத்தோடு திட்டினார்.

நான் பாரதியாரிடம் வந்து இதைப்பற்றிச் சொன்னேன். அங்கு + போனான் = அங்குப்போனான் என்றுதான் நீங்கள் இனி எழுத வேண்டுமென்று வற்புறுத்தினேன். அதற்குப் பாரதியார் சொன்னார் : 'அங்குப் போனான்' என்று எழுதினால் என்னவோபோல் இருக்கிறது; இயற்கைக்கு முரணாக ஒலிக்கிறதே—என்றார்.

'எப்படி ஒலித்தால் என்ன? நீங்கள் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் எழுத வேண்டும். புலவர்கள் இலக்கணம் தெரியாதவன் என்று கேவலமாகப் பேசுகிறார்கள்' என்று சொன்னேன் அதற்குப் பிறகு பாரதியார் இலக்கணத்தில் அதிக அக்கறை காட்டத் தொடங்கினார்.

என்னைக்கூடத் தமிழகத்துப் புலவர்கள் நீண்ட நாளாக மதிக்கவில்லை. இவன் என்ன கவிதைபாடுபவன் தானே? இவனிடத்தில் ஆழ்ந்த மொழிப்புலமை இருக்கவா போகிறது? என்று எண்ணினர். நான் யார் தெரியுமா? முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ்ப் புலவர் வகுப்புக்குப் பாடம் நடத்தியவன்! இது பலருக்குத் தெரியாது பெரும் புலவர்களிடத்தில் ஏழு ஆண்டுகள் இலக்கிய இலக்கணப் பாடம் கேட்டு ஆசிரியன் ஆனவன். என்னுடைய புலமையைத் தமிழ்ப் புலவர்கள் முன்னிலையில் பலமுறை புலப்படுத்தினேன். அதன் பிறகே என்னை மதிக்கத் தொடங்கினர்

பத்து ஆண்டுகளுக்குமுன் பெங்களூரில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. அதற்குத் தலைமை ஏற்க என்னை அழைத்திருந்தனர். நான் தலைமை ஏற்றிருந்த அந்த மாநாட்டிற்குத் தமிழகத்துப் பெரும் புலவர்கள் பலர் வந்திருந்தனர். டாக்டர் மா இராசமாணிக்கம், ஔவை சு. துரைசாமிபிள்ளை, மயிலைமடம் கல்லூரித் தலைவர் ஆகியோர் அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். அன்று என் கூட்டத்தில் கலகம் செய்வதற்கென்றே ஒரு கூட்டம் வந்திருந்தது. உடம்பெல்லாம் திருநீறு பூசிக்கொண்டிருந்த ஒரு தடியன் என் பேச்சினிடையே எழுந்து நின்றான்.

'பெரியார் இராமாயணத்தை எரிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்! ராதா கீமாயணம் போட்டு இராமாயணத்தை இழிவுபடுத்துகிறான்! இது சரியா? இராமன் கடவுளல்லவா?' என்று என்னைப் பார்த்துக் கேள்விகள் கேட்டான். எனக்குச் சினம் மிகுதியாக வந்துவிட்டது.

'நீ ஒரு சைவன்தானா? நீ சிவஞான சித்தியார் படித்திருக்கிறாயா? சிவஞான சித்தியாரில் அருள்நந்தி சிவாச்சாரியார் வைணவனை முன்னிலைப்படுத்திச் சில கேள்விகள் கேட்கிறார் மாயமான் பின்னால் ஓடி, மாயையில் சிக்கிய இராமன் கடவுளா? என்று கேட்கிறார்.

அப்பாடல் :

மாயமான் தன்னைப் பொய்மான்
  எனஅறியாத ரக்கன்
மாயையில் அகப்பட் டுத்தன்
  மனைவியை இழந்தான் தன்னை,
மாயைக்குக் கர்த்தா என்னை;
  மதிகெட்டங் கவனைக் கொன்று
காயனார் தமைப்பூ சித்தான்
  கொலைப்பழி நணுகி டாமே! – என்பதுதான்!

சைவனாகிய நீ இந்தக் கேள்வியைக் கேட்கலாமா? என்று கூறினேன். அந்தச் சைவன் நடுநடுங்கிப் போனான். கூட்டம் முடிந்ததும் என்னிடம் வந்தான் ஐயா! உங்களுடைய புலமையை நான் அறியாது போனேன்! மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கூறினான்

இதுபோலப் பல இடங்களில் என்னுடைய ஆற்றலைப் புலப்படுத்திய பிறகுதான் புலவர்கள் என்னை மதிக்கத் தொடங்கினர். திருக்குறளுக்கு நான் உரை எழுதத் தொடங்கிய பிறகுதான். புலவர்களிடையே அச்சங் கலந்த மரியாதை என்மீது தோன்றலாயிற்று." என்று கூறினார் பாவேந்தர்.

அலகபாத் நேருவும் அப்துல்லாவும்

அலகபாத்நேருவும் அன்றையகாசுமீரத்து முதலமைச்சர் சேக்அப்துல்லாவும் உள்ளம் ஒசித்த நண்பர்கள். இந்திய விடுதலைப் போர்க்காலத்தில் இணைந்து நின்ற நாட்டுத் தளபதிகள். உலகப் பெரியார் காந்தியார் அவர்களின் அன்புக்கு உரித்தானவர்கள். உள்ளத்தில் உரம் பெற்றவர்கள். உழைப்பால் உயர்ந்து உலகு புகழ் பெற்றவர்கள்! சவகர்லால் நேருவின் சொந்தத் தாயகம் காசுமீரம். அங்கே அப்துல்லா அரசியல் மனிதத்தின் முதல் அமைச்சர்! மிகப் பெரிய துணைக் கண்டத்தின் காவலராகத் தன்னை காத்துக்கொண்டார் நேரு. இந்தியாவின் கூட்டங்கள் உருவாகி மன்னர்களின் ஆளுகைக்குட்பட்ட பல பகுதிகள் இந்தியக் கூட்டுடன் இணைக்கப்பட்டபோது, காசுமீரம் தனித் தகுதிகள் கொண்ட மாநிலமாக மதிக்கப்பட்டது. ஒரே அரசியல் சட்டத்தின் கீழ்இரண்டுமுதலமைச்சர்கள் அனுமதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அங்கே எழுந்து ஓய்ந்த அரசியல் அமளிகள் அவனிக்குப் பல செய்திகளைத் தொகுத்து வழங்கின. காசுமீரம் நேருவின் ஆளுகையில் இணைய வேண்டும் என்று விரும்பியவர்கள் கழிந்துபோன பல துண்டுகளாக முயல்கின்றனர். பாகித்தான் தனி அரசு அமைக்கப்பட்ட நாட்களில் காசுமீரத்துப் பகுதியாருடன் இணைய வேண்டும் என்ற சிக்கல் சேர்ந்தே உருவானது இரு பகுதிகளின் எல்லை ஓரங்களில் ஓயாத சண்டைகள் கலவரங்கள் நாளிதழ்களில் என்றும் இடம் பெற்றன உலகம் பாராட்டிய நேருவின் புகழ் பாகித்தான் முரட்டுத் தாக்குதலினால் சிக்கலைத் தீர்க்க முடியாமல் செயலற்றுப் போயின. குழப்பத்துக்குரிய நீண்ட நெடுங்கதையாயிற்று!

அவனிபுகழ் நேருவும் அப்துல்லாவும் நேச உறவுகளை முறித்துக்கொள்ளவும் நேரிட்டது. கடுமையான சதிக் குற்றச் சாட்டுகளின்படி சேக் சிறையிலடைக்கப்பட்டார்! சரியாகப் பதினொரு ஆண்டுகள் சம்முச் சிறையில் சதிக் குற்றத்தின் விசாரணைகள் நடைபெற்றன. இந்திய அரசினரின் கோடிக் கணக்கான பணச் செலவும். பரிவாரங்களின் நடைச் செலவும் இந்திய மக்களின் வரிப் பணத்திலேதான் தீர்க்கப்பட்டன! ஆனால் மக்களின் மன நிலையை யாரும் தெரிந்து கொள்ளவில்லை — அமைச்சரவைகள் மாறின — தலைமையாளர்கள் மாற்றப்பட்டனர்! மக்கள் தங்கள் தலைவனை மறந்துவிடவில்லை சில திங்கள்களுக்கு முன்னால் நபிநாயகம் அவர்களின் போற்றிப் பாதுகாக்கப்பட்ட புனிதத் திருமுடி காணாமல் போனதால் கலகமும் கலவரமும் காசுமீர மண்ணில் ரத்தத் துளிகளைச் சேர்த்தன. முதலமைச்சர் பீடத்திலேயிருந்த சாதிக் அவர்களின் முயற்சிகள் முறிந்து போனதால் அவருடைய அரசியல் எதிரிகள் அப்துல்லாவின் சிறைவாசத்தை மக்களுக்குச் சொல்லிக்கிளர்ச்சிப் புயலை வேகப்படுத்தினர். எரி நெருப்பில் அதிகார வர்க்கத்தவரின் அடக்குமுறைகள் தீய்ந்து போயின. இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சேக்அப்துல்லாவை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டனர். நேருவின் அரசு அனுமதி தரவில்லை! ஆனால் அடக்கப்பட்ட மக்களின் அவசரக் கோரிக்கைகள் அதனை அமுல்படுத்தின— யாரும் எதிர்பாராத வேளையில் ஏப்ரல் எட்டாம் நாள் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டார்—இந்திய அரசியல் சட்டத்தின் அதிகார வரம்புகள் வளைந்து கொடுத்தன— வரவேற்புகளும் வழங்கின!

அரசியல் சதிவழக்கில் அவதிப்பட்டிருந்தாலும அப்துல்லாவின அரசியல் வளமைகள் குறையவில்லை என்பதனை அவர் வெளியே வந்த பிறகு தன்னுடைய பகைவர்களுக்குப் பாடமாகச் சொல்லியுள்ளார். இதற்கு முன் துணைக்கண்டத்து வரலாற்றில் இது போன்ற செய்திகளை எவரும் கண்டதில்லை. சதிக் குற்றத்தின் முதல் கைதியை முதலமைச்சர்

கடலரசன்

கள் சாதிக் மட்டுமல்ல பக்சிகுலாமும் நேரில் சென்று வாழ்த்தினர். இந்தியப் பிரதமர் நேருவும் பாகித்தான் அதிபர் அயூப்கானும் சந்திக்க விரும்பினர் அப்துல்லா ஏப்ரல் 29ம் நாள் புதுதில்லி வந்தார். நேருவின் புதல்வியார் இந்திரா அப்துல்லாவுக்கான வரவேற்புப் பொறுப்புகளில் நியமிக்கப்பட்டார். அரசுத் தரப்பின் உயர் அதிகாரிகளும் மசானி - செயப்பிரகாசர் போன்றோரும் விமான நிலையத்தில் வரவேற்றனர்! பாராளுமன்றத்தில்இந்தவரவேற்பினைக்கண்டித்துத் தாக்கினர். சனசங்கம் என்ற கட்சியின் தலைவர் வாச்பாயி என்பவர் கருப்புக் கொடி வரவேற்புக்கு ஏற்பாடு செய்துவிட்டார்! ஆனால் அப்துல்லாவும் பிரதமர் நேருவும் ஏழு நாட்களுக்கு மேல் ரகசியப் பேச்சுக்களில் தங்கள் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் இணைத்து எதிர்காலம் பற்றிய முடிவுகளைக் கண்டுள்ளனர். காசுமீரம் தனி உரிமைகள் பெற்ற தாயகமாகத் திகழவேண்டும் என்பதில் முழு நிறைவில்லாவிட்டாலும் கட்டு நாசமாகிவிடாமல் காத்துக் கொண்டனர். நாகபுரியில் வினோபாவேயைச் சந்தித்த சேக் சென்னையில் சுதந்திரக் கட்சித் தலைவர் இராசகோபாலாச்சாரியார் அவர்களையும் சந்தித்து காசுமீரத்தின் எதிர்கால அரசியல் உரிமைக்கு ஆய்வுரை பெற்றார்.

அலகபாத் நேரு அவர்களும் அப்துல்லாவும் அரசியல் சட்டத்தினைப் புதுப்பித்திருக்கிறார்கள். சர்தார் வல்லபாய் பட்டேலின் வாய்வீச்சுக்கள் சுதேச மன்னர்களையெல்லாம் தலைவணங்கச் செய்தன. ஆனால் காசுமீரத்து அரசியல் அடியுடன் மாறின துணைக் கண்டத்திலுள்ள நாகர்கள் விடுதலைக் கிளர்ச்சியும் தமிழகத்திலுள்ள முன்னேற்றக் கழகத்தின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளும் சட்டத்தாலே சாகடிக்க முனைந்தாலும் மக்களின் இதய வேட்கையினை மங்கச் செய்யவில்லை! அரசியல் சட்டத்தின் குறைபாடுகள் பல தவறுகளை நிறைவேற்றிவிட்டன. இந்தியாவின் அவசரப் பாதுகாப்புச் சட்டம்கூட செல்லத்தக்கதல்ல என்று 'சுப்ரீம்' நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. புதிய திருத்தங்கள் தேவைப்பட்டன. அவையும் தள்ளுபடி செய்யப்பட்டன! நில உச்சவரம்புச் சட்டம் மக்களவையில் நிறைவேற்ற முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது! காசுமீரத்திலிருந்து கன்னியாகுமரிக் கடலோரம் வரை அடிமைப்பட்ட மக்களுக்குத் தரப்பட்ட ஒற்றுமை ஆய்வுரையும் ஒருமைப்பாட்டுக் கட்டளையும் ஒழுங்கற்றுப்போயின. காசுமீரத்திற்காக அரசியல் சட்டம் மாற்றப்படுவதால் சேக் அப்துல்லாவின் விருப்பங்கள் தேவைப்படுவதுபோல் இல்லாவிட்டாலும் குறைந்த அளவில் வழங்கப்படுகின்றன! மக்களின் விளைவுகளை ஏற்றுக் கொள்ளாத சட்டங்கள் மொழி உரிமை உள்பட எல்லாப் பகுதித் தேவைகளையும் மறுக்கின்றன. ஆனால் சேக் அப்துல்லாபோன்றோரின் அரசியல் எழுச்சிகளுக்குமுன்னால் அலகாபாத் நேருக்களும் பணிந்து போகின்ற காட்சிகளைக் காண்கின்றோம்! அடுத்தசெய்தியைப் பொறுத்திருந்து காண்போம்!

திருக்குறள் பரிசுப் போட்டிகள்.

பலருடைய வேண்டுகோட்கு இணங்கிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் நடாத்தும் திருக்குறள் கட்டுரைப் போட்டி, ஆராய்ச்சிப்போட்டி புத்துரை விளக்கப் போட்டி ஆகியவற்றின் முடிவு நாள் சூன் 20-ஆகத் தள்ளிவைக்கப் பெற்றுள்ளது. போட்டிக்குரிய தலைப்புக்களையும் மற்ற விவரங்களையும்

செயலாளர்,
திருவள்ளுவர் திருநாள் விழாக் [குழு,
1/140, பிராட்வே,
சென்னை-1. என்ற முகவரிக்கு எழுதிப் பெறவும்.

பிளவுபட்ட கூரை

— புலவர். இரா. இளங்குமரன்

"அ.........ன்"

"மேலே காட்டிய குறியின் பொருள் யாது?

தமிழ் நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா விவகாரங்களும் தமிழ் மொழியில் நடக்கவேண்டும் என்பது பொருள். ஆரம்ப விளம்பரம் தமிழில் பிரசுரம் செய்ய வேண்டும். பாடசாலைகள் தொடங்கினால் அங்கு நூல்களெல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவதுமன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலே பெயர் சொல்ல வேண்டும். 'சிலேட்' 'பென்சில்' என்று சொல்லக்கூடாது."

"கும்பகோணம் தமிழாசிரியர் ஒருவர்; அவர் இலக்கணமாகவே பேசுவார்; பிறர்க்கு எளிதில் விளங்க வேண்டும் என்பதை நினையாமல் தமிழ் நாட்டில் வழக்கத்தில் வந்த சில வேறு மொழிச் சொற்களை அவ்வாறே வழங்காமல் மொழி பெயர்த்துக் கூறுவார். பிள்ளைகளிடம் பேசும்பொழுது சிலேட்' என்று சொல்லாமல் கற்பலகை என்றே சொல்லுவார். இப்படிப் பேசினால் தான் தம்மைத் தமிழ்க்கல்வியிற்சிறந்தவராக யாவரும்கருதுவார்கள் என்பது அவரது எண்ணம். அங்ஙனமே அநேகர் எண்ணி நடப்பது உண்டு."

இரண்டு பகுதிகளையும் மீண்டும் மீண்டும் படித்துப் பார்க்க வேண்டும்: சிறிது சிந்தித்தும் பார்க்க வேண்டும். இரு பகுதிகளுக்கும் உள்ள முரண்பாட்டை எடைபோட்டும் பார்க்க வேண்டும் அப்படிப் பார்த்தால் முன்னவர் மொழி வளர்ச்சியில் ஊறியவர் என்றும் மொழிப் பற்றுளர் என்றும், பின்னவர் மொழி வளர்ச்சிபற்றிக் கவலையேதும் இல்லாமல் வந்த சொற்களையெல்லாம் வாரிக் கொள்ள வேண்டும் என்னும் கருத்துடையவர் என்றும் ஒருவேளை எண்ணி முடிவுக்கும் வந்துவிடுவோம் அதற்குரிய சான்றினைக் காட்டி நிலைநிறுத்தவும் துணிவோம். ஆனால் இரு வேறுபட்ட கருத்துக்களையும் கூறிய சான்றோர்களின் பெயர்களைக் குறித்துக் காட்டிவிட்டாலோ அல்லது தெரிந்துகொண்டாலோ நாம் செய்த முடிவுக்கு அஞ்சுவோம்; நாணவும் செய்வோம்!

பாவேந்தர் பாரதியார் உரை முன்னது; தமிழ்த் தாத்தா சாமிநாதையர் உரை பின்னது! இவ்விருவரும் தமிழ் வளர்ச்சியில் வேறுபட்ட எண்ணம் உடையவர்களா? தமிழ்த் தொண்டில் மாறுபட்டவர்களா? தமிழ் வாழ, வளர எண்ணியதன்றி, அதனை வளர்த்து வளமுடையதாக்கக் கருதியதன்றிப் பிறிதொன்று எண்ணினரோ? இல்லையே! இருப்பினும் இக்கருத்து முரண்பாடு அறிஞர்களிடம் ஏற்பட்டிருந்தமை மொழி நலத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊறு செய்வதாக இருந்ததுடன், இன்றும் அந்நிலைமை மாறுமலேதான் இருக்கின்றது. இதனைச் சான்று காட்டி விளக்க வேண்டுவது இல்லை. கண்ணும் காதும் இருக்கும் அத்துணைப் பேர்க்கும் வெளிப்படையான உண்மையாகவே இருக்கிறது

அருளாளன் ஆபிரகாம் லிங்கனது பெருமை மிக்க சொற்பொழிவுகளிலே ஒன்று, 'பிளவுபட்ட கூரை பிழைக்காது" என்பது. நம் மொழியின் நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது பிளவுபட்ட கூரையே முன்னிற்கிறது! நம் மொழிப் பிளவு என்ன? மொழிக்குக் கண்ணென மதிக்கத் தக்க அறிவறிந்த சான்றோர்களிடத்தும் மொழி வளர்ச்சி—மொழிக் காப்பு—பற்றிய ஒருப்பட்ட நிலைமை இல்லை! அந்தப் பிளவே மொழிப் பிளவாகித்தமிழ்த் தாயின் முகத்தில் மாறு வடுக்களாகக் காட்சி வழங்குகின்றது!

"வேற்று மொழிச் சொற்கள் புகுதல் கூடாது: வேற்று மொழி எழுத்துக்கள் புகுதல் அறவே கூடாது. அவ்வாறு ஓரொரு கால் புகநேரின் தமிழின் இயல்புக்கு ஏற்ப, ஒலியமைப்புப் பெற்று முழுக்க முழுக்கத் தமிழ்ச் சொல்லாகவே காட்சியளிக்க வேண்டும்'—இது முழுமுதல் இலக்கண நூல் விதி! இவ்விதியை வகுத்துக் காட்டி, மொழி வாழ்வாங்கு வாழ வகை கண்ட 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" மொழிக்காப்பாளன் அல்லனோ? அவன் நெறியை அணு அணுவாகத் தெளிய ஆராய்ந்தும் அதன் வழி நிற்காது. அவ்வழியே மொழியைப் பேணாது சிலர் செல்ல, சிலர் சிலர் அதைப் பேணி நிற்க, பேணி நிற்பாரையும் பேணாதாரையும் மாறிமாறிப் பாராட்டியும் பழித்தும் பல்லாயிரம் தமிழர் பொழுது போக்க. 'மொழி வெறி' என்றும், 'மொழிக் கொலை' என்றும் 'பட்டங்கள்' சூட்டிப் பிரித்துப் பிரித்துக் கொடுக்க உவதான பிளவு நிலை' மொழிக்காப்பு ஆகுமா? அவர்களும் மொழிக்காப்பாளர் ஆவார்களா?

உடையில் கறை கூடாது; வீட்டுள் குப்பைகூடாது; உடலில் அழுக்குக் கூடாது: வழியில் பள்ளம் மேடு நாற்றம் இவை கூடா! அரிசி பருப்பு எண்ணெய் முதலாம் பண்டங்களில் கலப்புக் கூடா! இவ்வளவும் விரும்புவோம்! ஏற்போம்; முரண்பட்டால் பழிப்போம்! மொழிக் கலப்போ முடிந்த அளவும் செய்வோம்! மொழிக் கொலையும் பண்ணுவோம்!

பாரதியார் மொழிக் குழப்பமும் சிதைவும் கலப்பும் மிக்க காலத்தே வாழ்ந்தார்; ஆங்கில 'மோகமும்' வட மொழிக் கலப்பும் உச்சநிலை உற்றிருந்த சூழ்நிலையில் வாழ்ந்தார், தமிழ்ச் செய்தித் தாளும், தமிழ் மேடையும் தமிழ்க் கல்வியும் காணுதற்கரிய கால நிலையில் வாழ்ந்தார்: அந்நிலைமையிலும் அவர் கொண்டிருந்த மொழிப் பற்றையும், வளர்ச்சி நோக்கத்தையும் எடைபோட்டுப் பார்க்கும்போதுதான் அவர் பெருமை புலனாகும்; அவர் உழைப்பும் தெளிவாகும்

'MEMBER'—மெம்பர் என்னும் ஆங்கிலச்சொல்லை ஆங்கிலம் கற்றோரும் அன்றி மற்றோரும் அறிவர். தமிழ் மட்டுமே சிறிது கற்றோரும்—ஏன் கல்லாதவர்களும் கூட 'மெம்பர்' என்னும் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லை அறிவர். ஆனால் பாரதியார் இச்சொல்லைத் தமிழாக்க எப்பாடுபட்டார்! அவரே எழுதுகின்றார்:

'மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். அவயவி சரியான வார்த்தை இல்லை. 'அங்கத்தான்' கட்டிவராது. 'சபிகன்' சரியான பதந்தான். ஆனால் பொதுமக்களுக்குத் தெரியாது யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரை மணி நேரம் யோசித்துப் பார்த்தேன். உறுப்பாளி' ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனத்திற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்' கடைசியாக 'மெம்பர்' என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆர அமர யோசித்துப் பார்த்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்லுகிறேன்"

பாரதியாரின் கால நிலைமையில் இன்றையத் தமிழ் இல்லை. தமிழ் தனிமொழி, உயர் மொழி, செம்மொழி என்று பிற நாட்டவர்களாலும் உறுதி செய்யப்பெற்றுவிட்டது இருந்தாலும் 'பிடிவாதமாகவே'—தம்மால் முடிந்த அளவும் பிறமொழி எழுத்துக்களையும் சொற்களையும் வாரி வாரிக் கொட்டி எழுதுவதும் பேசுவதும் 'நாகரிகம்' என்று கருதிக்கொண்டிருப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணைபோபவர்களுக்கும் குறைவு இல்லை. தூய நிலையில் பேசவும், எழுதவும் ஆற்றலும் பயிற்சியும் உடைய அறிஞர்கள் பலரும்—வேண்டு மென்றே—கலவையில் குழம்பும்—குறைப்பும்—பிடிவாத நிலைமை தமிழ் மொழிக்கென்றே தனிச் சிறப்பாக அமைந்த கேடு போலும்! இந்நிலைமை மாறுவது எந்நாளோ? மாற்றுவதும் எந்நாளோ?

மாநில மாநாட்டு அறிவிப்பு

உலகத் தமிழ் கவிஞர் பெரு மன்றம்

இராசிபுரம் : : சேலம் மாவட்டம்

பாவலர்காள் நம் தலைவர் பாவேந்தர் நம் திறத்தைப்
பார்த்திடவே தான்மறைந்து பார்க்கின்றார் பார்க்கின்றார்
மார்கழியாம் திங்களினில் மாநிலத்து மாநாட்டை
ஆரணியில் கூட்டுதற்கு ஆயத்தம் செய்துவிட்டேன்
உலகிலுள்ளோர் கண்டுவப்ப ஊக்கமொடு கவிஞர்குலம்
திரண்டெழுந்து வந்திடுவீர் தேனெனவே பாடிடுவீர்
கவியரங்கே மாநாடு கருத்தெல்லாம் பாட்டினிலே
மூன்று நாள் நிறைவுடனே நின்றெளிரும் வாழ்த்திடுவீர்

சேக்சுபியரின் சிறப்பு — பேராசிரியர் வி. ஒப்பிலி.

உலகப் பெருங்கவிகளுள் ஒருவராக மதிக்கப்பெறும் சேக்சுபியரது 400வது பிறந்தநாள் விழா மாநிலமெங்கும் இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் கொண்டாடப்படுகிறது. ஆங்கில இலக்கிய உலகில் சேக்சுபியரது வாழ்க்கை வரலாற்றினைப் பற்றியும் அவரது நாடகங்களின் ஆராய்ச்சி முறையிலும் வெளியிடப்பட்டுள்ள நூல்களும், தனி மலர்களும் கணக்கிலடங்காதவை. ஆங்கில மொழி செல்வ வளமும், கவிநலமும் செறிந்து விளங்குவதற்கு ஆதாரமாயிருந்தவர்களுள் சேக்சுபியர் முதலிடத்தைப் பெறுகிறார். தமது நூல்களில் ஏறத்தாழ 21,000 சொற்களைப்பயன்படுத்திய மனிதர் அவர் ஒருவர்தாம் என மொழி வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். அவருக்கு அடுத்த பெருங் கவிஞனை மில்தன் என்பார் தமது நூல்களில் 8000 சொற்களையே பயன்படுத்தியுள்ளார் (Articles pronouus excluded differences in inflectional forms not considered) வாழ்க்கையில் பல்வேறு துறைகளையும், மனிதனுடைய நுட்பமான உணர்ச்சிகளையும் ஆழ்ந்த எண்ணங்களையும், நாடக முறையில் படம் பிடித்தாற்போல் எடுத்துக்காட்ட சேக்சுபியருக்கு அத்தனை சொற்கள் வேண்டியிருந்தன!

ஆவன் நதிக்கரையிலுள்ள Startford என்ற கிராமத்தில் 1564ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சேக்சுபியர் பிறந்தார். கிராமத்துப் பள்ளியோடு அவர் படிப்பு நின்றுவிட்டது. அவரது தந்தை விவசாயியாகவும், கையுறைகள் (Gloves), தோல், மற்றும் தானியங்கள்விற்கும் சிறு வணிகராகவும்வாழ்ந்துவந்தார். 1577ஆம் ஆண்டு அவர் வறுமையுறவே, சேக்சுபியர் படிப்பைத் தொடராது, சிறிது காலம் வணிகத்தைக் கவனிக்குமாறு நேர்ந்தது. அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் யாவும் இன்றளவும் முழுவதும் தெரியவில்லை. தமது 18வது வயதிலேயே அவர் 26 வயதுள்ள அம்மையாரை மணக்க நேர்ந்தது இன்றும் புரியாத புதிர்! 1585ம் ஆண்டில் சிறிதுகாலம் சேக்சுபியர் அவரது கிராமத்திற்கு அருகிலுள்ள மற்றொரு கிராமத்தில் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்ததான ஒரு கதையுண்டு. மேலும், சர் தாமசு லூசி (Sir Thomas Lucy) என்பாரின்தோட்டத்தில்ஒருமானைத் திருடியதாகவும், அதற்காக அவர் லூசியின் ஆட்களால் கைது செய்யப்பட்டு, சாட்டையால் அடிக்கப் பெற்றதாகவும் மற்றொரு கதையுண்டு. இதன் பின்னர் ஆறு ஆண்டுகளுக்கு அவரது வாழ்க்கை வரலாறு தெளிவாக இல்லை.(1586-92) 1592ம் ஆண்டிற்கு முன்னரே அவர் இலண்டன் நகரை பிழைப்பிற்காக அடைந்திருக்கவேண்டும். இவ்வாண்டில் சேக்சுபியர் இலண்டன்மாநகரில் ஒரு நாடகக் கவிஞராகவும், தனிப் பாடல்கள் இயற்றுவதில் புகழ் வாய்ந்தவராகவும் தோன்றுகிறார்.

இலண்டன் நகரில் சேக்சுபியர் இருபத்தோர் ஆண்டுகள் (1592-1613) வாழ்ந்தார். இதற்குள் 5 தனிப் பாடல்களையும், 154 "சானெட்டு" (Sonnet) என்ற 14 வரிப் பாடல்களையும், 36 அல்லது 37 நாடகங்களையும் எழுதினார்.

அவரது இளமை நாட்களில் எழுதப் பெற்ற தனிப் பாடல்கள் காதலின் இறைத்தன்மையையும், உணர்ச்சிப் பெருக்கால் எழும் காமத்தின் இழிவையும், இவை இரண்டிற்குமுள்ள வேறுபாட்டினையும் பெரும்பாலும் எடுத்துரைக்கின்றன. அவரது "சானெட்டு"களில் அழியா நட்பின் தன்மையையும், தமக்கும் தமது நண்பனுக்கும் இடையே தோன்றிய ஒரு பெண்ணைப்பற்றியும், தமக்கு எதிராக முளைத்த ஒரு கவிஞனைப் பற்றியும் அவர் பாடுகிறார். இத் தனிப் பாடல்கள் எல்லாவற்றிலும், இளமையின் துடிப்பையும் கற்பனைச் செறிவையும், உணர்ச்சி வேகத்தையும் காண்கிறோம். எடுத்துக்காட்டாகச் சில வரிகள்:

"உனது உணர்ச்சிகளைக் காதலென்று கூறாதே! காதலென்னும் அரசன் சொர்க்கத்திற்கு ஓடிவிட்டான். அவனிடமிருந்து இம்மாநிலத்தைப் பறித்துக்காமம் என்னும் கொடுங்கோலன், அவன் பெயரால் ஆண்டுவருகிறான். காதலின் எளிய தோற்றத்தைப் புனைந்து உலகில் தோன்றும் புத்தம் புது அழகையெல்லாம் காமக் கொடுங்கோலன் அழிக்கிறான் — பசுந்தளிர்களைப் புழுக்கள் அழிப்பதுபோல்!

மழைக்குப் பின் தோன்றும் கதிரொளிபோல் மனதை அமைதியுறச் செய்வது காதல்; ஆனால் வெயிலுக்குப் பின் வீசும் புயல் போன்றது காமம். காதல் ஒரு மென்மையான வசந்தம்; அது எப்பொழுதும் இனிமையாக நிலவுகிறது. காமமோ கோடைபாதிமுடியு முன்னேதோன்றித் துன்புறுத்தும் பனிக்காலம் போன்றது. காதல் மிகினும் திகட்டுவதில்லை; (ஆதலால் தீங்கில்லை) ஆனால் பெருந்தீனி உண்பவனைப்போல், காமம் செத்துவிடுகிறது. காதல் மெய்யானது. காமம் பொய்யே உருவானது. ("வீனசும் அடோனிசும்.")

காலமும் காதலும்

"காலத்தின் கொடுமையானகை பண்டையநாட்களில் செல்வத்தையும், பெருமையையும்அழிப்பதைக் கண்டேன். அழிவு என்னும் வெறியனுக்கு என்றும் அடிமைப்பட்டதுபோல், மாட மாளிகைகள் யாவும் சில சமயங்களில் மண்ணோடு மண்ணாவதைக் கண்டேன். அளவற்ற பசியோடு கடலரக்கன் கரையெனும் நாட்டைக் கைப்பற்றிப்பலனடைவதைக்கண்டேன். அவ்வாறே உறுதியான மண்ணும் கடல் நீரை வெற்றி கொள்வதையும் கண்டேன். இழப்போடு பலனும் (Prfit), பலனோடு இழப்பும் வளர்வதைக் கண்டேன். இவ்வாறு எல்லாம் தம் நிலைமாறுவதையோ, நிலைகெட்டு அழிவதையோ கண்டேன். நான் கண்ணுற்ற அழிவு என்னைச் சிந்திக்க வைக்கிறது: என் காதலையும் பறித்துச்செல்லக் காலம் வரும்! ஐயோ! இவ்வெண்ணமே சாவு போலிருக்கிறது! எதை இழக்க அஞ்சுகிறேனோ, அதை என்னிடமே வைத்துக் காத்து அழுவதைத் தவிர வேறு வழி?"

(சானெட்டு-64)

(தொடரும்)

"தமிழிலக்கியத்தின் தலையணியாகிய திருக்குறளை ஓதியுணர்ந்தாலல்லது தமிழறிந்தவன் என்று எவனும் கூறிக்கொள்ள முடியாது என்பதில் சிறிதும் ஐயமின்று"

— பிரடெரிக் பின்காட்

புதுவை முதலமைச்சர் தலைமையில்

புரட்சிக் கவிஞருக்கு நினைவுக் குழு

புதுவை மாநில மக்களுக்குப் புகழைக்குவித்துத் தமிழ் மக்களின் தனிப்பெரும் கவிஞராய்த் திகழ்ந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நினைவு என்றென்றும் நிலைத்து நின்று வருங்கால மக்களுக்கு இலக்கியப்பெருநிலையமாய்விளங்கக்கூடியவாறு பாவேந்தருக்கு ஏற்றதொரு நினைவுச்சின்னம் அமைக்கவும் அவர்தம் நூல்களை மக்கள் பதிப்பாக வெளியிடவும் கவிஞரின் குடும்பத்தினருக்கு நல்வாழ்வு அளிக்கவும், கடனில் மூழ்கும் கவிஞர் இல்லத்தை மீட்டுத் தமிழ் மக்களின் பொதுச்சொத்தாக்கவும் பெருநிதி திரட்டக் கீழ்க்கண்ட குழுவைப் புதுவை மாநில முதலமைச்சர் திரு. குபேர் அவர்கள் அமைத்துள்ளார்.

முதலமைச்சரின் தலைமையில்

அமைச்சர் திரு. வி. வெங்கடசுப்பா ரெட்டியார்
அமைச்சர் திரு. எம். கே. சிவரத்தினம்
வித்துவான் திரு. கு. சிவப்பிரகாசன் எம், ஏ., எம், பி.
திரு. என். சேதுராமன்–துணைமேயர்
திரு. ஏ. எஸ். கந்தசாமிபிள்ளை–தலைவர், பு. ரா. காங்கிரசு
திரு. எச். எம். காசிம்–முன்னாள் மேயர்

திரு. ந. கோவிந்தசாமி-வணிகர் திரு. ப. கனகலிங்கம்-வணிகர் திரு. அ. சேனாபதி முதலியார்-வணிகர் திரு. துரை முனுசாமி ஆகியவர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

தமிழ்மக்கள்-குறிப்பாகப் புதுவை மாநிலமக்கள் தங்களின் தலையாயகடமையாகப்பாவேந்தருக்கு அனுப்பும் காணிக்கையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

திரு. அ. சேனாபதி முதலியார், பொருளாளர் - பாரதிதாசன் நினைவுக்குழு,
80, காந்தி ரோடு – புதுச்சேரி–1.

நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச்செயல்.

தமிழ், ஆங்கில, ஆயுர்வேத மருந்துகள் அனைத்தும்
குறைந்த விலையில் நம்பிக்கையுடன்
வாங்குவதற்குச் சிறந்த இடம்

அம்பிகா மருந்து விற்பனை நிலையம்
Ambica MEDICALS
56, வடக்கு வெளி வீதி
(சிம்மக்கல் அருகில்)
மதுரை-1

ஆசிரியரும் வெளியிடுபவரும் : பேராசிரியர் சி. இலக்குவனார், திருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.